Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 37
கதிர் : 29

சனிக்கிழமை
25 டிசெம்பர் 2021

மார்கழி 10 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2053

பக்கங்கள்: 20

விலை: 30/=

**கொரோனா**

நேற்று 573
மொத்தம் 582,722

**உயிரிழப்பு**

நேற்று 20
மொத்தம் 14,852

### இந்திய மீனவரின் அத்துமீறலைத் தடுக்கக்கோரி

# யாழ்.செயலகம் முற்றுகை!

## மீனவ அமைப்புக்கள் நேற்றுப் போராட்டம்



யாழ்ப்பாணம், டிசெம்பர் 25

இந்திய இழுவைப்படகு மீனவர்களின் அத்துமீறலைக் கண்டித்தும், அத்துமீறலைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்தியும், யாழ்ப்பாண மாவட்டச் செயலகம் நேற்று முற்றுகையிடப்பட்டது. அதனால், பிரதான வீதிப் போக்குவரத்தும் துண்டிக்கப்பட்டது.

19



வாசகர்கள், விளம்பரதாரர்கள், முகவர்கள், விநியோகஸ்தர்கள் அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும், உதயனின் நத்தார் தின நல்வாழ்த்துக்கள்.

## சிறுமி கொலை தொடர்பில் தாய், தந்தை, சகோதரி கைது

கிளிநொச்சி, டிசெ. 25
முல்லைத்தீவு உடையார்கட்டு வடக்கு மூங்கிலாறு கிராமத்தைச் சேர்ந்த யோகராசா நிதர்சனா

19

### நாளை தொடக்கம்

## முடங்குகின்றன ரயில் சேவைகள்

கொழும்பு, டிசெ. 25
நாளை ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவு தொடக்கம் சகல சேவைகளிலிருந்தும் விலகத் தீர்மானித்துள்ளதாகவும், தொடர் வேலைநிறுத்தப்போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாகவும் ரயில் நிலைய

19

## யாழ்ப்பாணத்தில் மற்றொருவருக்கும் மலேரியா !

யாழ்ப்பாணம், டிசெ. 25
யாழ்ப்பாணத்தில் மற்றுமொரு மலேரியா நோயாளி அடையாளம்

19

## வெளிநாட்டுப் பிரஜைகளுக்கான திருமண நடைமுறை பொருத்தமற்றது

### பொதுமக்கள் பலரும் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், டிசெ. 25
வெளிநாட்டுப் பிரஜைகள், இலங்கையில் திருமணம் செய்வதற்கு, இறுக்கமான நடைமுறைகளை அரசாங்கம் அறிவித்துள்ளநிலையில், அவை நடைமுறைக்குச் சாத்தியமற்றவை என்று, பொதுமக்கள் கூறுகின்றனர்.
வெளிநாட்டு குடியுரிமை கொண்ட ஒருவர் இலங்கைப் பிரஜை ஒருவரைத் திருமணம்

19

### முச்சந்தி முரளி



" அப்ப கிறிஸ்மஸ் கொண்டாட ஊருக்குப் போனவைக்கு ரயில் இல்லாமல் திண்டாட்டம் தான் பாருங்கோ"

## தவறான முடிவெடுத்து மாணவி சாவு

யாழ்ப்பாணம், டிசெ. 25
பாடசாலை மாணவி ஒருவர் தவறான முடிவெடுத்து உயிர்மாய்த்துள்ளார் என்று, பொலிஸார் தெரிவித்தனர்.
இந்தச் சம்பவம், சிறுப்பிட்டி

19

## வவுனியாவில்: தீப்பந்தப் போர்!



19

## ளிபொருள் விலை மீண்டும் எகிறும்?

கொழும்பு, டிசெ. 25
எரிபொருள்விலையை மீண்டும் அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்பதைப் பொறுப்புடன்

19

## 'ஒரே நாடு, ஒரே சட்டம்' அல்ல 'ஓர் ஆளுக்கு ஒரு சட்டம்'

- மனோ கணேசன் கடும் விசனம்
- செயலணியிலுள்ள தமிழ், முஸ்லிம்கள் பதவி விலகவேண்டும் என்றும் வலியுறுத்து



கொழும்பு, டிசெ. 25
"காவிப் பயங்கரவாதியான, ஞானசாரர் தலைமைவகிக்கும், 'ஒரே நாடு ஒரே சட்டம்' செயலணியின் பெயரை, 'ஓர் ஆளுக்கு ஒரு சட்டம்' என்று மாற்றுமாறு பிரேரிக்கிறேன். அதுமட்டுமன்றி, குறித்த செயலணியிலுள்ள தமிழ் மற்றும் முஸ்லிம் உறுப்பினர்கள் உடனடியாகப் பதவிவிலகவேண்டும் என்றும் கோருகின்றேன்" என, நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தெரிவித்தார்.
இது தொடர்பில் அவர் மேலும்

19

## அரச ஊழியர்களுக்கு முற்கொடுப்பனவு

கொழும்பு, டிசெ. 25
அரச ஊழியர்களுக்கு எதிர்வரும் ஜனவரி முதலாம் திகதி 4 ஆயிரம் ரூபா முற்கொடுப்பனவு வழங்கப்படவுள்ளதாக பொது நிர்வாக

19

## கைவிடப்பட்டது மருத்துவர்களின் போராட்டம்

கொழும்பு, டிசெ. 25
அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்தினர், நான்கு

16



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விலை உயர்வுகளைக் கண்டித்து வலி.தென்மேற்கில் போராட்டம்!





**யாழ்ப்பாணம், டிசெ.25**

**பொருள்களின் திடீர் விலையேற்றத்தைக் கண்டித்து வலி. தென்மேற்கு பிரதேச சபை உறுப்பினர்கள் நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, ஐக்கிய தேசியக் கட்சி, சுயேச்சைக் குழு உறுப்பினர்கள் இணைந்து இந்தப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.**

பந்தங்கள் ஏந்தியவாறு, விறகுக் கட்டைகளைச் சுமந்து பாண் மரவள்ளிக் கிழங்கு என்பவற்றை உட்கொண்டு அத்தியாவசியப் பொருள்களின் தட்டுப்பாட்டைச் சுட்டிக்காட்டி உறுப்பினர்கள் போராட்டம் நடத்தினர்.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த சபையின் தவிசாளர் ஜெபநேசன் அரசின் தவறான கொள்கை முடிவுகளால் மக்கள் உணவு உண்ண முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

எரிவாயுவையோ, அரிசியையோ வாங்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

எமது மக்கள் படும் துன்பத்தை உலகுக்கு வெளிச்சம் போட்டுக் காட்டும் வகையிலேயே இந்தப் போராட்டத்தை முன்னெடுத்தோம். -என்றார். (எ-319)

# உறங்கச் சென்றவர் சடலமாக மீட்பு

யாழ்ப்பாணம், டிசெ. 25

இரவு சாப்பிட்டுவிட்டு உறங்கச் சென்றவர், அதிகாலை படுக்கையில் இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார். யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 49 வயதுடைய நபரே சடலமாக மீட்கப்பட்டார்.

திடீர் மரண விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் விசாரணைகளை மேற்கொண்ட பின்னர், சடலம் பிரேத பரிசோதனைக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளது. (ம-4-26)

# பொருத்தமற்ற உரம் விநியோகம்

மன்னார், டிசெ.25

நெற்செய்கைக்குப் பொருத்தமில்லாத உரங்கள், கிருமி நாசினிகள் விநியோகிக்கப்படுகின்றன என்று மன்னார் விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

மன்னார் மாவட்டத்தில் பெரும்போக விவசாயத்துக்கான விதைப்பு நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டு, ஒரு மாதத்துக்கு மேலாகிய நிலையில், பல விவசாயிகள் உரம் மற்றும் கிருமிநாசினிகள் கிடைக்காமல் திண்டாடி வருகின்றனர்.

எனினும் விற்பனையாளர்கள் தங்களிடம் கையிருப்பில் இருக்கும் பொருத்தமில்லாத உரங்களைப் பாவிக்குமாறு விவசாயிகளைக் கட்டாயப்படுத்தி விநியோகிக்கின்றனர். பொருத்தமில்லாத உரங்களைப் பாவிக்கும் போது, நெல் விளைச்சல் பாதிக்கப்படும் என்று விவசாயிகள் தெரிவித்துள்ளனர். (ம-4-213)



# யாழில் களைகட்டிய சவுக்குமர விற்பனை

யாழ்ப்பாணம், டிசெ.25

கிறிஸ்மஸ் பண்டிகை இன்று கொண்டாடப்படும் நிலையில், யாழ்ப்பாணத்தில் நேற்று சவுக்குமர விற்பனை சூடுபிடித்தது. யாழ்ப்பாணம் நகரப் பகுதிகளிலும், புறநகர்ப் பகுதிகளிலும் வீதிகளில் சவுக்கு மர விற்பனை களைகட்டியது. மக்கள் ஆர்வத்துடன் சவுக்கு மரங்களைக் கொள்வனவு செய்ததை அவதானிக்க முடிந்தது. (எ-27)

# வடிந்தோட முடியாது வெள்ளம் தேக்கம்

## மாணவர்கள் சிரமம்

யாழ்ப்பாணம், டிசெ.25

அல்லாரை அரசினர் தமிழ் வித்தியாலயத்தின் வளாகத்தைச்சுற்றி முழங்காலுக்கு மேல் வெள்ளம் தேங்கி நிற்பதால், மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

வித்தியாலயத்திலிருந்து அறுகம்புலவுப் பிள்ளையார் கோவில் வீதி வரை செல்லும் வீதியும், அதற்கு இடைப்பட்ட குறுக்கு வீதிகளும் உரிய திட்டமிடல் இல்லாமல் தார் வீதியாக அமைக்கப்பட்ட காரணத்தால், வெள்ளம் வடிந்தோடாது பாடசாலை வளாகத்தில் தேங்கியுள்ளது.

இதனால் வகுப்பறைகள் மற்றும் மலசலகூடப் பாவனைக்குச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. வெள்ளம் தேங்கி நிற்பதால் நுளம்புப் பெருக்கமும் அதிகரித்துள்ளது.

எனவே தேங்கி நிற்கும் வெள்ளத்தை வெளியேற்ற உரிய திணைக்களங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வித்தியாலய அதிபர் கோரிக்கை விடுத்துள்ளார். (ம-4-159)





# குப்பைகள் அகற்றும் வாகனம் தீப்பிடிப்பு

வவுனியா நகரசபைக்குச் சொந்தமான குப்பைகள் அகற்றும் உழவியந்திரத்தின் பெட்டி நேற்று அதிகாலை தீப்பிடித்தது.

நேற்று முன்தினம் இரவு அகற்றப்பட்ட கழிவுகளுடன், நகரசபையின் வளாகத்தில் வாகனம் நிறுத்தப்பட்டிருந்தது. நேற்றுக் காலை பணிக்குச் சென்ற ஊழியர் ஒருவர், குறித்த வாகனம் தீப்பிடித்து எரிவதை அவதானித்தார். பின்னர் நகரசபை தீயணைப்பு வாகனத்தின் உதவியுடன், தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது. தீ விபத்தில் வாகனம் பகுதியளவில் சேதமடைந்தது. சம்பவம் தொடர்பில் வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. சி.சி.ரி.வி கமராவின் உதவியுடன் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (ம-4-110.18)

# பி.சி.ஆர். அறிக்கை போலியாகத் தயாரிப்பு

*மூவர் கைது.*

கொழும்பு. டிசெ.25

பி.சி.ஆர் அறிக்கையை போலியாகத் தயாரித்து அதிக விலைக்கு விற்பனை செய்தனர் என்ற குற்றச்சாட்டில் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர். கொச்சிக்கடையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். சந்தேகநபர்கள் போலியான பி.சி. ஆர் அறிக்கைகளைத் தயாரித்து வெளிநாடு செல்பவர்களுக்கு அதிக விலைக்கு விற்பனை செய்துள்ளனர் என்று விசாரணையில் தெரியவந்துள்ளது. (ம-4-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### புலிகளின் தலைவர் பிரபாகரனின்

# கல்வியறிவு தொடர்பில் பேசுவதற்கு பொன்சேகாவுக்கு அருகதையில்லை!

## சிவாஜிலிங்கம் பதிலடி

**யாழ்ப்பாணம், டிசெ. 25**

**தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரனின் கல்வி அறிவைப் பற்றிக் கதைக்கும் சரத் பொன்சேகா, தனது கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவின் படிப்பறிவு தொடர்பில் அறிந்து கொள்ளவேண்டும் என்று வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.**

நேற்று யாழ்ப்பாணத்தில் நடத்திய ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

சரத் பொன்சேகா இரட்டை வேடம் போடும் ஒருவர். சிங்கள ஊடகம் ஒன்றுக்கு அவர் வழங்கிய நேர்காணலில் தமிழீழ விடுதலைப் புலிகளுடைய தலைவர் மேதகு பிரபாகரன் மற்றும் விடுதலைப் புலிகள் இயக்கத்திலிருந்தோர், ஏனைய விடுதலைப் போராட்ட இயக்கத்தில் இருந்தவர்கள் கல்வியறிவு அற்றவர்கள் என்ற கருத்தை முன்வைத்துள்ளார்.

அவருக்கு நான் சொல்லவிரும்புவது. இலங்கையின் தலைவர்களாக, பிரதமராக இருந்தோர் மற்றும் ஏனையோர் எட்டாம் ஆண்டு, பத்தாம் ஆண்டு படித்தவர்களே. பல்கலைக்கழகப் படிப்பு அல்லது பட்டப் படிப்பை முடித்தவர்கள் அல்லர்.

தலைவர் பிரபாகரன் தன்னுடைய 15 ஆவது வயதில் விடுதலைப் போராட்டத்தில் இணைந்து விட்டார். ஏனைய இயக்கங்களின் தலைவர்களும் உயர் படிப்புக்களை படிக்கவில்லை. ஆனால் அனுபவங்களின் மூலம் செயற்பட்டவர்கள். இராணுவத்தின் உயர் பதவியான மார்ஷல் பட்டத்தைப் பெற்றவராகவே தலைவர் பிரபாகரனை உலகத்தில் உள்ள அனைவரும் பார்க்கின்றனர். ஒரு நடைமுறை அரசை, முப்படையை வழிநடத்திக் காட்டியவர் அவர். ஜெயசிக்குறு இராணுவ நடவடிக்கையை ஓயாத அலை என்னும் முறியடிப்புச் சமர் மூலம் முறியடித்த பெருமை பிரபாகரனையே சேரும். இரட்டைவேடம் போடும் பொன்சேகா போன்றோர் கருத்துக்கூறும் அளவுக்கு அவர் எளிதானவர் அல்லர்.

சரத் பொன்சேகா 2010ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும்போது, இவ்வாறான கருத்துக்களைக் கூறியிருக்கலாமே?. இப்போது தென் பகுதி வாக்குகளுக்காக இப்படியான கருத்துக்களைக் கூறுகின்றார். நாம் இன்று மகிழ்ச்சியடைகின்றோம். இவ்வாறான இரட்டை வேடம் போடும் ஒருவரை ஜனாதிபதியாக்கியிருந்தால் தமிழ் மக்கள் பெரும் பாதிப்புக்களை அடைந்திருப்பார்கள். என்றார். (எ-26,27)

---

# மாயமான விக்கிரகங்கள்; ஒருவர் பொலிஸ் பிடியில்!

யாழ்ப்பாணம், டிசெ.25

காங்கேசன்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் அண்மைய நாள்களில் இந்து ஆலயங்களில் விக்கிரகங்கள் திருடப்பட்ட சம்பவங்கள் தொடர்பில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

திருடப்பட்ட 5 விக்கிரகங்களும் கைமாற்றப்பட்டுள்ளமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த 9ஆம் திகதிக்கும், 23ஆம் திகதிக்கும் இடைப்பட்ட காலத்தில் தெல்லிப்பழை மற்றும் காங்கேசன்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் இந்து ஆலயங்களில் இருந்த விக்கிரகங்கள் திருடப்பட்டிருந்தன.

காங்கேசன்துறை பிராந்தியத்துக்குப் பொறுப்பான மூத்த பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் உப பொலிஸ் பரிசோதகர் நிதர்சன் தலைமையிலான மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸார் இது தொடர்பான விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர்.

விசாரணைகளின் அடிப்படையில் காங்கேசன்துறை, நல்லிணக்கபுரத்தைச் சேர்ந்த 34 வயதான ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

திருடப்பட்ட விக்கிரகங்களின் ஒளிப்படங்கள், அவரது கைபேசியில் காணப்பட்டன என்றும், தொடர் விசாரணைகளின் அடிப்படையில் இரு விக்கிரகங்கள் கைப்பற்றப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது. மீட்கப்பட்ட விக்கிரகங்கள் தெல்லிப்பழையில் ஒப்படைக்கப்பட்டதுடன், சந்தேகநபரும் தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்தில் பாரப்படுத்தப்பட்டுள்ளார். (எ-26)

---

# வடக்கு மாகாணத்துக்கு 54 மருத்துவ அதிகாரிகள்

யாழ்ப்பாணம், டிசெ.25

மத்திய சுகாதார அமைச்சின் உள்ளகப் பயிற்சியை நிறைவு செய்த மருத்துவ அதிகாரிகளுக்கு நேற்றுமுன்தினம் நாடளாவிய ரீதியில் நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

இது தொடர்ப்பில் அவர் விடுத்துள்ள செய்தி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது

வடக்கு மாகாணத்துக்கு புதிதாக 54 மருத்துவ அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் 15 பேர் யாழ் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்கு உட்பட்ட மருத்துவமனைகளுக்கும், 14 பேர் மன்னார் மாவட்ட மருத்துவமனைகளுக்கும், 10 பேர் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனைகளுக்கும், 8 பேர் கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனைகளுக்கும், 7 பேர் வவுனியா மாவட்ட மருத்துவமனைகளுக்கும் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கு மேலதிகமாக 6 மருத்துவ அதிகாரிகள் யாழ் போதனா மருத்துவமனைக்கு நியமிக்கப்பட்டுள்ளனர். கடந்த ஒக்ரோபர் மாதம் மத்திய சுகாதார அமைச்சால் புதிதாக வழங்கப்பட்ட மருத்துவ அதிகாரிகளின் நியமனத்தின் போது வட மாகாணத்துக்கு 188 மருத்துவ அதிகாரிகள் நியமிக்கப்பட்டனர்- என்றுள்ளது. (எ-26)

---




தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கம் எண்ட அமைப்பு போன கிழமை ஒரு அரசியல் கலந்துரையாடலை நடத்தினது. அதில சில அரசியல்வாதியள், அரசியல் ஆய்வாளர்கள் எண்டு கொஞ்சப் பேரை தெரிவு செய்து அவை தங்கட கருத்தைச் சொல்லுற மாதிரி அந்தப் புரோக்கிராம் இருந்திச்சு.இதுக்கு முதலும் இதே மாதிரிக் கலந்துரையாடல்களை அதே அமைப்பு செய்திருக்கு. முந்தின கலந்துரையாடல்களில பங்குபற்றின சிலரை இந்தமுறை கூப்பிடேலை எண்டு அவைக்கு கோபம். அதை ஏற்பாட்டுக்காரரிட்டயும் பிறகு சொன்னவையாம். ஆனாலும் ஆர் வந்தாலும் , வராட்டியும் தமிழரசுச் சட்டாம்பி வந்தே ஆகோனுமெண்டு ஏற்பாட்டாளர் ஒற்றைக்காலில நிண்டிருக்கிறார். கொஞ்சக் காலத்துக்கு முதல் ஏற்பாட்டாளருக்கும் சட்டாம்பிக்கும் எட்டாப் பொருத்தம். ஆனால் இப்ப ஒரு கேஸ் விசயத்தில, சட்டாம்பியார்தான் உந்த ஏற்பாட்டாளருக்கு பிணை எடுத்துக் குடுத்தவர். அதுக்குப் பிறகு மெல்ல மெல்ல ஆளும், சட்டாம்பியும் ஒட்டுறவாயிட்டினம். ஆனால் அதைப் பெரிசா வெளியில காட்டிக் கொள்ளுறேலை.எண்டாலும் தானாடாட்டியும் சதை ஆடுமெல்லோ. அப்பப்போ சட்டாம்பிப் பாசம் ஏற்பாட்டாளருக்கு தன்னையுமறியாமல் வந்திடும். இந்த நிகழ்ச்சியிலையும் அதுதான் நடந்தது.

வழக்கமா சட்டாம்பி ஒரு பொலிசி வைச்சிருக்கிறார். உப்பிடியான விவாதங்கள், கலந்துரையாடல்களில தான் தான் கடைசியாப் பேசவேனும் எண்டதுதான் அந்தப் பொலிசி. ஏனெண்டால் அப்பதான் முதல் கதைச்சவையின்ர கருத்துகளுக்கு சரியோ , பிழையோ ஏதுமொண்டை உச்சக்குரலில உருட்டுவார். கேக்கிறவைக்கு சட்டாம்பி சொல்றதுதான் சரி எண்டமாதிரி ஒரு மனோநிலை வந்திடும். அவருக்கு பிறகு ஆரும் பேசினால் இவரின்ர கருத்தில இருக்கிற ஓட்டையளையெல்லாம் எடுத்து புட்டுப் புட்டு வைச்சால், தன்ர சீத்துவம் தெரிஞ்சிடுமெண்டதாலயும் கடைசியாப் பேசத்தான் சட்டாம்பிக்கு விருப்பம். இந்தப் பிளான் சாதாரண சனத்துக்கு தெரியாட்டியும், அவரை நல்லா அறிஞ்சவைக்குத் தெரியும். அரசியல் ஆய்வாளர்களுக்கு இன்னும் நல்லாத் தெரியும். அதால இந்தமுறை கலந்துரையாடலில, எல்லாரும் பேசி முடிஞ்சபிறகு , எங்களைப் பேச விடுங்கோ. அப்பதான் அவை விட்ட பிழைகளைச் சுட்டிக் காட்டி உண்மையைச் சனத்துக்கு சொல்ல முடியும் எண்டு அரசியல் ஆய்வாளர்கள், ஏற்பாட்டாளருக்குச் சொல்லியிருக்கினம். ஏற்பாட்டாளரும் அதுக்கு ஓமெண்டு தலையாட்டியிருக்கிறார்.

எல்லாரும் எதிர்பார்த்தமாதிரி சட்டாம்பியார் தங்கட நடவடிக்கையெல்லாம் அதிபுத்திசாலித்தனமானது எண்டும், அது சாதாரண ஆக்களுக்குத் தெரியாதெண்டும், தங்கட எல்லா ராஜதந்திரங்களையும் வெளியில சொன்னால் அது காட்டிக் குடுக்கிற மாதிரி இருக்குமெண்டும், அதொண்டும் தெரியாமல் சும்மா உந்தப் பத்தி எழுத்தாளர்கள் கண்டபடி எழுதுகினம் எண்டு உருட்டோ உருட்டெண்டு உருட்டினார். (அவர் பேசப் பேச சபையில ஒரே கை தட்டு. என்னெண்டு பார்த்தால் கைதட்டுறதுக்கு எண்டே பத்துப் பதினைஞ்சு பேரை தன்னோட கூட்டிக் கொண்டந்தவராம் சட்டாம்பியார்) முந்தின மாதிரி தனக்குப் பிறகு பேச ஆக்கள் இல்லை எண்ட நினைப்பில தான் அவர் அப்பிடி சண்டைக் கோழியா மாறி கொக்கரிச்சவர். ஆனால் அதுக்குப் பிறகு பேசின ஒரு அரசியல் ஆய்வாளர், சட்டாம்பியை பிடிச்சார் ஒரு பிடி. ஒரு அரசியல்வாதிக்கு பக்குவம் வேனும். வெள்ளடியன் சேவல் மாதிரி சும்மா சிலுப்பிக் கொண்டு சண்டைக்குப் போறதில்ல அந்தப் பக்குவம். ஒரு அரசியல் கட்சியோ, ஒரு இனமோ தன்ர வெளியுறவுக் கொள்கையை இரகசியமா ஒருக்காலும் வைச்சிருக்கிறேலை. அரசியல்வாதிகள் பிழைவிட்டால் அதை ஆய்வாளர்கள், பத்தி எழுத்தாளர்கள் மக்களின்ர சார்பில கேள்வி கேக்கத்தான் செய்வினம். அதுக்கு பக்குவமா பதில் சொல்றதுதான் மக்களின்ர பிரதிநிதிகள் எண்டு சொல்லிக் கொள்ளுற அரசியல்வாதிகளின்ர கடமை எண்டு பதிலடி குடுக்க, சட்டாம்பி அப்பிடியே நிலைகுலைஞ்சு போட்டார். இப்பிடி ஒரு தாக்குதலை அவர் எதிர்பாக்கவேயில்லை. உடனேயே ஏற்பாட்டாளரைக் கூப்பிட்டு காதுக்க ஏதோ சொன்னார். அப்பிடிச் சொன்னவுடன அந்த ஏற்பாட்டாளருக்கும் அதுவரை உள்ளுக்க ஒளிச்சிருந்த 'சட்டாம்பி பாசம்' பொங்கி வழிஞ்சு, கலந்துரையாடலுக்கு போட்ட ரூல்ஸையெல்லாம் குப்பையில போட்டிட்டு, இன்னொருக்கா, கடைசிப் பேச்சாளாராவும் சட்டாம்பியிட்ட மைக்கை குடுத்தார். சட்டாம்பியும் ஏதோ பதில் சொல்லுறனெண்டு வழிஞ்சு, குழைஞ் சிட்டு போட்டார். 'நல்ல ஏற்பாட்டாளர், நல்ல ரூல்ஸ்' எண்டு பார்த்தவை புறுபுறுத் துக் கொண்டு போச்சினமாம்.



- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருள்களின் விலை மேலும் அதிகரிக்கும்!

## அரச தரப்பு தெரிவிப்பு



**கொழும்பு, டிசெ. 25**

**நாட்டில் பொருள்களின் விலை மேலும் அதிகரிப்பதற்கான சாத்தியப்பாடுகளே காணப்படுகின்றன. கொரோனாப் பெருந்தொற்று நிலைமையிலிருந்து மீளும் வரை இந்தப் பிரச்சினையை நாம் எதிர்கொண்டாக வேண்டும். இது பற்றி மக்களும் சிந்திக்கவேண்டும் இவ்வாறு ஆளுங்கட்சி பிரதம கொறடாவான அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பொருள்களின் விலை உயர்வென்பது அனைத்துத் தரப்பினருக்கும் பாதிப்பான விடயமாகும். எனவே, அது தொடர்பான முடிவை எவரும் விரும்பி எடுப்பதில்லை.

விரும்பாவிட்டாலும் விலை அதிகரிப்பை மேற்கொள்ள வேண்டிய கட்டாய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

இலங்கை வங்குரோத்தடையும் என்ற எதிரணிகளின் விமர்சனங்களானவை வெறும் பகல் கனவுகளாகும். அத்துடன், அந்நியச் செலாவணிக் கையிருப்பை அரசு உரிய வகையில் முகாமை செய்யும் -என்றார். (ம-4-44)

# சந்தேகநபரை நடுவீதியில் தாக்கிய இரு பொலிஸார்

## வீடியோவால் பரபரப்பு


கொழும்பு,டிசெ.25

போக்குவரத்துப் பொலிஸார் இருவர், நடுவீதியில் நபர் ஒருவரை தாக்கும் வீடியோ சமூக வலைதளங்களில் பரவி வருகின்றது.

இந்தச் சம்பவம் கேகாலைப் பிரதேசத்தில் பதிவாகியுள்ளது. தாக்குதலுக்கு உள்ளான நபர் கேகாலையில் மேலதிக வகுப்புகளுக்குச் செல்லும் மாணவர்களிடம் பணம் பறித்து வந்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

சந்தேகநபர் கேகாலை நிதஹஸ் மாவத்தையில் வயோதிபப் பெண் ஒருவரைத் தாக்கிப் பணம் பறிக்க முற்பட்டபோது, பொலிஸாரால் தாக்கப்பட்டுள்ளார். குறித்த வயோதிபப் பெண் தற்போது கேகாலை பொது மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

குறித்த நபர் போதைப் பொருளுக்கு அடிமையானவர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ம-4-இ)



# உலருணவு விநியோகமும் மரக்கன்றுகள் நடுகையும்

வவுனியா,டிசெ.25

வவுனியா தச்சன் குளத்தில், கொரோனாப் பேரிடர் காரணமாக தொழில் வாய்ப்பிழந்துள்ள குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கலும், மரக்கன்றுகள் நடுகையும் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

கிராம அபிவிருத்திச் சங்கத்தின் வேண்டுகோளுக்கு அமைவாக, தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தால், தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

அந்தப் பகுதியில் மரக்கன்றுகளும் நடுகை செய்யப்பட்டன.

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன், வவுனியா மாவட்ட இணைப்பாளர் கா.சோ.சிவநேசன், கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தலைவர் வ.தேவிகா உள்ளிட்டோர் நிகழ்வில் கலந்துகொண்டனர். (4-இ)

# ஈஸ்டர் தாக்குதல் சூத்திரதாரிகள் தண்டனை அனுபவிக்கவேண்டும்

## சஜித் வலியுறுத்து

கொழும்பு, டிசெ.25

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் குற்றவாளிகளுக்கு எதிராக சட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதை நாட்டிலுள்ள அனைத்துக் கிறிஸ்தவர்களின் சார்பாகவும் ஐக்கிய மக்கள் சக்தி எதிர்பார்க்கின்றது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தி ஏற்பாடு செய்திருந்த நத்தார் நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

தாக்குதல் முன்னெடுக்கப்பட்ட போது கிறிஸ்தவ சமூகம் நடந்து கொண்ட விதம் பாராட்டுக்குரியது. மிகப் பெரிய சோகம் ஏற்பட்டபோதும், கிறிஸ்தவ சமூகம் அமைதியாக பதிலளித்ததுடன், வன்முறைக்குச் செல்லவில்லை.

உண்மையை வெளிக்கொணரும் பொறுப்பு அனைவருக்கும் இருக்கின்றது. தாக்குதல்களில் ஈடுபட்ட அனைவரையும் சட்டத்தின் முன் நிறுத்துவதில் எதிர்க்கட்சி கவனம் செலுத்துகின்றது -என்றார். (எ-இ)

# தொழில் வழிகாட்டல் விருதுகள் வழங்கல்

தேசிய தொழில் வழிகாட்டல் வார விருதுகள் வழங்கும் நிகழ்வு கிளிநொச்சி மாவட்டச் செயலக பயிற்சி நிலையக் கட்டடத் தொகுதியில் நேற்று இடம்பெற்றது.

மாவட்டச் செயலகத்தின் மனிதவலு வேலைவாய்ப்புத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற நிகழ்வில் மாவட்டச் செயலர் றூபவதி கேதீஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார். நிகழ்வில் தேசிய தொழில் வழிகாட்டல் வாரத்தையொட்டி பாடசாலை மாணவர்களுக்கிடையில் நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ்களும், காசோலைகளும் வழங்கப்பட்டன. (ம-46)

# கணபதி ஹோமம்

கொடிகாமம், டிசெ.25

உசன், கஜகேணி விநாயகர் ஆலயத்தில் மஹா கணபதி ஹோமம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு பிரதமகுரு சிவசிறீ இ.கேதீஸ்வரக்குருக்கள் தலைமையில் நடைபெறவுள்ளது. இதன்போது விசேட அபிஷேக ஆராதனைகள் நடைபெற்று விநாயகப் பெருமான் திருவீதியுலாவும் இடம்பெறவுள்ளன. அடியவர்கள் சுகாதார சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றிக் கலந்துகொள்ளுமாறு ஆலய நிர்வாகத்தினரால் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-159)

# மனைவியைக் கொன்றவர் 14 ஆண்டுகளின் பின் கைது


கொழும்பு, டிசெ. 25

பெண் ஒருவரைக் கட்டையால் தாக்கிக் கொலை செய்த குற்றச்சாட்டில், உயிரிழந்த பெண்ணின் கணவர் 14 ஆண்டுகளின் பின்னர் பொலிஸாரால் கடந்த புதன்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.


இந்தச் சம்பவம் 2007ஆம் ஆண்டு நடந்தது. இரண்டு பிள்ளைகளின் தாயான ஜாஸ்மின் ரஞ்சனி (வயது49) என்பவரே கொலை செய்யப்பட்டிருந்தார். உயிரிழந்த பெண்ணின் கணவர் பிரதான சந்தேகநபராக அடையாளம் காணப்பட்டிருந்த நிலையில் அவர் தலைமறைவாகியிருந்தார்.

2009ஆம் ஆண்டு நுவரெலியா நீதிவான் நீதிமன்றத்தின் உத்தரவின் பேரில், கொலை மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றப் புலனாய்வுப் பிரிவினர் இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை ஆரம்பித்திருந்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு



வந்த பொலிஸ் குழு 74 வயதான சந்தேகநபரை எம்பிலிப்பிட்டிய பிரதேசத்தில் வைத்து தற்போது கைது செய்துள்ளது. (எ-இ)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கோழிப்பண்ணையில் சிலிண்டர் வெடிப்பு

## மூவாயிரம் கோழிகள் சாவு

கொழும்பு, டிசெ. 25
பன்னல பல்லேகம எலிபிச்சிய பிரதேசத்தில் உள்ள கோழிப்பண்ணையில் நேற்று அதிகாலை எரிவாயு சிலிண்டர் வெடித்ததில், மூவாயிரத்துக்கும் மேற்பட்ட கோழிக் குஞ்சுகள் உயிரிழந்துள்ளன.
நீர்கொழும்பு வர்த்தகர் ஒருவருக்குச் சொந்தமான 17 ஏக்கர் காணியில் குறித்த கோழிப் பண்ணை அமைந்துள்ளது. அங்கு சுமார் 35 ஆயிரம் குஞ்சுகளை அடைக்கக்கூடிய ஏழு கூடங்கள் உள்ளன. அதில் ஒரு கூடத்தில் தீப்பிடித்துள்ளது.
கோழிக் குஞ்சுகளுக்குத் தேவையான வெப்பத்தை ஏற்படுத்த மூன்று எரிவாயு சிலிண்டர்கள் பொருத்தப்பட்டிருந்தன. அதில் ஒரு சிலிண்டரில் ஏற்பட்ட கசிவு காரணமாக தீ விபத்து ஏற்பட்டிருக்கலாம் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம-4-இ)




இந்தியாவுக்கு தனிப்பட்ட விஜயமொன்றை மேற்கொண்டுள்ள பிரதமர் மஹிந்த ராஜபக்ச, ஏழுமலையானைத் தரிசனம் செய்தார். அவருக்குத் திருப்பதி தேவஸ்தான அதிகாரிகள் லட்டு, ஏழுமலையானின் திருவுருவப்படம் மற்றும் பிரசாதங்கள் வழங்கினர். (ம-4-இ)

# நிதியமைச்சராக இருக்க பஸிலுக்கு தகுதியில்லை

## விஜயதாஸ தெரிவிப்பு



**கொழும்பு, டிசெ. 25**
**நிதியமைச்சராக இருப்பதற்குரிய தகுதி பஸில் ராஜபக்சவுக்கு இல்லை. அவர் நிதியமைச்சராக இருப்பது சட்டவிரோதமானது என்று சிறீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் விஜயதாஸ ராஜபக்ச தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,
நாட்டின் சட்டத்தின் பிரகாரம், நிதி அமைச்சராக பஸிலை ஏற்றுக்கொள்ள முடியாது. 24ஆவது உறுப்புரிமையில், இலங்கையில் குடியுரிமையை பெற்ற எவரும் வேறொரு நாட்டின் அரசியலமைப் பின்படி உறுதிமொழி ஏற்றிருந்தால், அவர்களது குடியுரிமை இரத்துச் செய்யப்படும்.
பஸில் அமெரிக்கக் குடியுரிமையைக் கொண்டுள்ளார். அமெரிக்காவில் குடியுரிமையைப் பெறுவதென்றால் அந்த நாட்டு நீதிமன்றத்தின் முன்பாக உறுதிமொழி ஏற்க வேண்டும். இலங்கையில் 1948 ஆம் ஆண்டிலேயே வேறொரு நாட்டில் உறுதிமொழியை ஏற்றுக்கொள்பவர்களின் குடியுரிமை இரத்தாகும் எனச் சட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது.
அமெரிக்காவில் குடியுரிமையைப் பெற்று, அதன் பின்னரே இலங்கையில் தன்னை அமைச்சராகப் பதிவுசெய்து கொண்டிருக்கின்றார். இதனூடாக அமெரிக்காவின் அரசுக்கு வழங்கிய உறுதிமொழி, இலங்கையின் அரசியலமைப்பு என்பவற்றை மீறியுள்ளார். 20ஆவது திருத்துச் சட்டத்தில் இரட்டைக் குடியுரிமை இரத்துச் செய்யப்பட்டாலும், குடியுரிமைச் சட்டம் தற்போது நாட்டில் நடைமுறையில் உள்ளது. எனவே பஸிலை நிதி அமைச்சராக ஏற்றுக்கொள்வது சட்டவிரோதமானது - என்றார். (ம-4-இ)

# சிறுமியுடன் உல்லாசம் 15 வயது சிறுவன் கைது

கொழும்பு, டிசெ. 25
தனது அண்ணாவின் தேசிய அடையாள அட்டையைப் பயன்படுத்தி சிறுமியுடன் உல்லாசமாகத் திரிந்த பாடசாலை மாணவன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.
15 வயதான பாடசாலை மாணவன் கண்டி உடுநுவர சிறுவர் தடுப்பு மத்திய நிலையத்தில், தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.
சிறுமியும், மாணவனும் கடந்த 8 மாதங்களாக காதலர்களாக இருந்துள்ளனர். கடந்த 19ஆம் திகதி மேலதிக வகுப்புக்குச் செல்வதாகக் கூறி, இருவரும் நாவலப்பிட்டி நீர்வீழ்ச்சியொன்றுக்குச் சென்று மாலை வரையிலும் நேரத்தைக் கழித்துள்ளனர். அதன்பின்னர், அவ்விருவரும் நுவரெலியாவுக்குச் சென்றுள்ளனர். ஹொட்டல்களில் சிறுவர்களுக்கு அறைகள் கிடைக்காது என்பதை அறிந்து, தன்னுடைய மூத்த அண்ணாவின் தேசிய அடையாள அட்டையை மாணவன் திருடிச் சென்றார் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ம-4-இ)

# பால்மாவுக்கு தட்டுப்பாடு 2 மாதங்கள் தொடரும்!

கொழும்பு, டிசெ. 25
பால்மாவை ஏற்றி வரும் கப்பல்களின் தாமதம் மற்றும் களஞ்சியக் கட்டணங்கள் அதிகரிப்புக் காரணமாக, பால்மாத் தட்டுப்பாடு இன்னும் இரண்டு மாதங்களுக்குத் தொடரக்கூடும் என்று பால்மா இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.
இது தொடர்பில் அதன் ஊடகப் பேச்சாளர் அசோக பண்டார தெரிவிக்கையில்,
இறக்குமதி செய்யப்பட்ட பால்மாவைக் கொள்வனவு செய்வதற்கு டொலர் இல்லாத காரணத்தால், வங்கிகள் ஊடாக கடன் கடிதங்களை வழங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. எனவே பால்மாவுக்கான தட்டுப்பாடு காரணமாக நுகர்வோர் அசௌகரியங்களுக்கு உள்ளாவதைத் தடுக்க உள்நாட்டுப் பால்மா நிறுவனங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார். (ம-4-இ)

# சாரதி அனுமதிப்பத்திரம் நடைமுறையில் மாற்றம்

கொழும்பு, டிசெ. 25
மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம், சாரதிப் பயிற்சியில் தேர்ச்சி பெற்ற தினத்திலேயே அனுமதிப்பத்திரங்களை வழங்கும் நடைமுறையை நிறுத்த நடவடிக்கை எடுத்துள்ளது.
சாரதி அனுமதிப்பத்திரங்களை விநியோகிக்கும் பழைய முறைமையால், மோசடிகள் இடம்பெறுகின்றன என்று கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளை அடுத்து இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. எழுத்து மூலம் பரீட்சையில் தேர்ச்சி பெற்ற பின்னர், செயன்முறைப் பரீட்சையில் தேர்ச்சி பெறும் நபர்கள் 500 ரூபா செலுத்திய பின்னர் சாரதி அனுமதிப்பத்திரத்தை வழங்கும் நடைமுறை இருந்தது.
செயன்முறைப் பரீட்சையில் தேர்ச்சி பெற்ற தினத்தில் சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கப்படாவிட்டாலும், தற்காலிக அனுமதிப்பத்திரம் கிடைக்கும் என்பதுடன் அதனைப் பயன்படுத்தி வாகனங்களைச் செலுத்தமுடியும்.
அதேவேளை மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தில் நேரத்தை ஒதுக்கிக்கொண்ட நபர்களுக்கான ஒருநாள் சேவை மற்றும் ஏனைய சேவைகள் தொடர்ந்து நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-4-இ)

## அதிகாலையில் பனி நீடிக்கும்

கொழும்பு, டிசெ. 25
நாட்டின் பெரும்பாலான பிரதேசங்களில் அதிகாலையில் பனிமூட்டமான காலநிலை நீடிக்கும் என்று வளிமண்டலவியல்திணைக்களம் தெரிவித்துள்ளது.
நுவரெலியா மாவட்டத்தில் சில இடங்களில் அதிகாலை வேளையில் துகள் உறைபனி உருவாகக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.
மேல், சப்ரகமுவ, மத்திய, வடமத்திய மற்றும் ஊவா மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் காலை வேளையில் பனிமூட்டமான நிலை காணப்படும்.
காலியிலிருந்து மாத்தறை ஊடாக அம்பாந்தோட்டை வரையான கடற்பரப்புகளில் சில இடங்களில் மழை பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது என்றும் எதிர்வு கூறப்பட்டுள்ளது. (ம-4-இ)

# விபத்துக்களை கட்டுப்படுத்த உலக வங்கி உதவிக்கரம்

கொழும்பு, டிசெ. 25
இலங்கையில் வீதி விபத்துகளைக் கட்டுப்படுத்த உலக வங்கி உதவ முன்வந்துள்ளது என்று நெடுஞ்சாலைகள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.
எதிர்வரும் இரண்டு வருடங்களில் விபத்துகளைக் குறைப்பதற்கான விசேட வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும். ஜனவரி இரண்டாவது வாரத்தில் அந்தத் திட்டம் ஆரம்பிக்கப்படும். பலர் நித்திரை காரணமாக விபத்துக்குள்ளாவதை நாம் கண்டிருக்கின்றோம். எனவே, முதற்கட்டமாக நெடுஞ்சாலைகளில் ஓய்வெடுக்கும் பகுதிகள் அமைக்கப்படும். சாரதிகள் ஓய்வெடுக்கும் பகுதிகளில் வாகனங்களை நிறுத்தி சிறிது நேரம் தூங்கிவிட்டுச் செல்ல முடியும். அதிவேக நெடுஞ்சாலைகளில் விபத்துகளைக் குறைப்பதற்கு பொலிஸாருடன் இணைந்து புதிய திட்டம் ஆரம்பிக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ம-4-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** நண்பர்கள் மீது நம்பிக்கை வரும். இனிய சந்திப்பு ஒன்று உண்டு. சுபச்செய்தி வரும். நண்பர்களால் அன்புத் தொல்லைகள் ஏற்படும். பழைய சேமிப்பு இன்றைய செலவுக்கு கைகொடுக்கும்.

**இடபம்:** இன்று வரும் செய்தி மகிழ்ச்சியை தரும். குடும்ப ஒற்றுமை சிறக்கும். நண்பர் ஒருவரிடம் உங்களது எண்ணங்களை பகிர்ந்து கொள்வீர்கள். வீண் அலைச்சல் குறையும்.

**மிதுனம்:** வீண் செலவினங்களால் தொல்லைகள் ஏற்படலாம். சரியான நேரத்தில் தூங்க முடியாமல் இருந்த சூழ்நிலை மாறும். உஷ்ண சம்பந்த மான நோய் நீங்கி நிம்மதி வரும்.

**கடகம்:** அடிப்படை வசதிகளை மேம்படுத்திக்கொள்ள செலவு செய் வீர்கள். பணியில் கவனமாக இருப் பது நல்லது. நட்பு வட்டம் விரியும். பிற ரது மனம் புண்படும் செயல்களைச் செய்ய வேண்டாம்.

**சிம்மம்:** நீண்ட நாள் வேண்டுதலை நிறைவேற்றி மகிழ்ச்சி அடைவீர்கள். உற்சாகமாகவும் உல்லாசமாகவும் இன்று பொழுது போகும். அரசு அதிகாரிகளின் உதவியால் சில விஷயங்கள் முடியும். வீண் விவாதங்களில் ஈடு படவேண்டாம்.

**கன்னி:** இன்று சந்திக்கும் நபர்க ளால் சந்தோஷம் அதிகரிக்கும். குடும் பத்தில் சிறு சிறு மருத்துவ செலவு கள் வந்துபோகும். நண்பர் ஒருவ ரின் வழிகாட்டுதல் சிறப்பான பலன் தரும்.

**துலாம்:** குழந்தைகள் விரும்பிய நல்ல விஷயங்கள் இன்று நடக்கும். நீங்கள் எதிர்பார்த்த விஷயங்கள் தடையின்றி முடியும். மகிழ்ச்சி கூடும். வியாபாரத்தில் இலாபம் உண்டு. வருத்தம் நீங்கும். பிரச்சினைகள் படிப்படியாகக் குறையும்.

**விருச்சிகம்:** சகஊழியர்கள் உங்களை ஆதரிப்பர். தொட்டது துலங்கும் நாள். மற்றவர்கள் உங்கள் வேலைகளை பகிர்ந்து கொள்வார்கள். தைரியமுடன் செயற்பட்டு பிரச்சினையில் இருந்து மீளுவீர்கள்.

**தனுசு:** உறவினர்களுடன் இருந்து வந்த பகை விலகும். உங்களின் சேமிப்பு உதவும். துணிச்சலாக செயற் பட்டு சில முக்கிய முடிவுகளை எடுப் பீர்கள். உறவுகள் பலப்படக்கூடும்.

**மகரம்:** தேவையற்ற வாக்குவாதங்க ளைத் தவிர்ப்பது நல்லது. பிறரிடம் ரக சியத்தை பகிர்ந்து கொள்ளும் போது கவனம் தேவை. கவனமாக இருக்க வேண்டிய நாள். விற்பனையும் லாபமும் இருக்கும்.

**கும்பம்:** ஆடம்பர செலவுகளை குறைத்து சேமிக்கத் தொடங்குவீர்கள். எதிர்பாராத செலவு வந்தாலும் அது மகிழ்ச்சியையே தரும். பணியாளர்க ளுக்கு புதிய யுக்திகள் தோன்றும். நட்பு வட்டம் விரியும்.

**மீனம்:** குடும்பத்தின் வருங்கால திட் டத்தில் ஒன்று நிறைவேறும். அக்கம் பக்கத்தினர், உறவினர்களை அனு சரித்து செல்ல வேண்டும். பணியாள ருக்கு பொறுப்பு கூடும். மகிழ்ச்சியான விஷயம் நடக்கும்.

## டெல்டா, ஒமிக்ரோன் கலவையாக

# உருவாகின்றது 'டெல்மிக்ரோன்'

**டெல்டா, ஒமிக்ரோன் கலவையாக 'டெல்மிக்ரோன்' எனும் புதிய கொரோனா வைரஸ் உருவாகியுள் ளது. இது ஒமிக்ரோனை விட வேக மாகப் பரவக்கூடியது என்றும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.**



கடந்த 2019ஆம் ஆண்டு இறு தியில் சீனாவின் வுஹான் நக ரில் கொரோனா வைரஸ் பரவு வது கண்டறியப்பட்டது. அங்கி ருந்து உலகம் முழுவதும் வைரஸ் பரவி பெரும் பாதிப்பு களை ஏற்படுத்திவருகின்றது.

கடந்த ஓராண்டாக கொரோனா வைரஸின் மரபணு மாறி புதிய வகை வைரஸ்கள் உருவாகி வருகின்றன்.

மேலும் தென்னாபிரிக்காவில் அண்மையில் புதிய உருமா றிய வைரஸுக்கு ஒமிக்ரோன் என்று பெயரி டப்பட்டது.

உலகம் முழு வதும் வியா பித்து பரவி யுள்ள டெல்டா வைரஸைவிட, ஒமிக்ரோன் வைரஸ் அதிவேகமாகப் பரவி வருகின்றது. இந்த நிலையில் டெல்டா, ஒமிக்ரோன் கலவை யாக 'டெல்மிக்ரோன்' எனும் புதிய கொரோனா வைரஸ் உரு வாகியுள்ளது. இது 2022ஆம் ஆண்டில் சுனாமி போன்று கொரோனா அலையை ஏற்ப டுத்த வாய்ப்புள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

எனினும் புதிய உருமாறிய வைரஸ் குறித்து உலக சுகாதார அமைப்பு இதுவரை அதிகாரபூர் வமாக எவ்வித அறிவிப்பையும் வெளியிடவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

## பங்களாதேஷில்

# பயணிகள் படகில் தீ; 40 பேர் உயிரிழப்பு


டாக்கா,டிசெ.25



பங்களாதேஷில் மிகப் பெரிய பயணிகள் படகில் ஏற்பட்ட தீ விபத்தில் 40 பேர் உயிரிழந்துள்ளது டன் 200 இற்கும் மேற் பட்டோர் காயமடைந்துள் ளனர்.

பங்களாதேஷ் தலைநகர் டாக்காவில் இருந்து 250 கி.மீ தொலைவில் உள்ள ஜலகதி மாவட்டத்தில் உள்ள சுகந்தா நதியில் பயணிகளை ஏற்றிச்செல்லும் படகிலேயே குறித்த தீ விபத்து ஏற்பட்டுள்ளது. நேற்று அதிகாலை 3 மணி யளவில் இடம்பெற்ற இந்த விபத்தில் முதலில் இயந்திர பகுதியில் பரவிய தீ பின் படகின் மற்றைய பகுதிகளுக்கும் பரவியுள்ளது. இதனால் தூங்கிக் கொண்டிருந்த பயணி கள் தீயில் சிக்கிக் கொண்டனர்.

இதுபற்றி தகவல் கிடைத்ததும் சம்பவ இடத்துக்கு விரைந்த தீயணைப்புப் படை வீரர்கள் 2 மணி நேர போராட்டத்தின் பின் தீயைக் கட்டுக்குள் கொண்டுவந்த னர் எனத் தெரிவிக்கப்படுகிறது.



# ஊரடங்குக்கு வாய்ப்பில்லை



சென்னை, டிசெ.25

தமிழகத்தில் இரவு நேர ஊரடங்குக்கு வாய்ப்பில்லை என முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தின்பின் அதி காரிகள் தெரிவித்துள்ளனர்.

ஒமிக்ரோன் வைரஸ் கடந்த சில நாள்களாக தமிழகத் தில் பரவத் தொடங்கியுள்ளது. இதுவரை தமிழகத்தில் 34 பேர் ஒமிக்ரோன் வைரஸால் பாதிக்கப்பட்டுள்ள னர்.

வைரஸ் பரவலைத் தடுப்பதற்கு பல்வேறு நடவடிக்கை களை தமிழக அரசு மேற்கொண்டு வருகின்ற நிலை யில் இதுதொடர்பான ஆலோசனைக் கூட்டம் முதல மைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில் இடம்பெற்றது.

இந்த ஆலோசனை கூட்டத்தில், தமிழகத்தில் இரவு நேர ஊரடங்குக்கு வாய்ப்பில்லை என கூட்டத்தின் பின் அதிகாரிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# வடிவேலுவுக்கு கொரோனா

சென்னை, டிசெ.25

நகைச்சுவை நடிகர் வடிவேலு கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளார்.

நீண்ட இடைவெளிக்குப் பிறகு மீண்டும் நடிக்க வந்துள்ள வடிவேலு, 'நாய் சேகர் ரிட்டர்ன்ஸ்' எனும் படத்தில் நடித்து வருகி றார்.

இந்த நிலையில் இரு நாள்களுக்கு முன்பு லண்டனில் இருந்து சென்னைக்குத் திரும் பிய வடிவேலுவுக்கு கொரோனாப் பரிசோ தனை மேற்கொள்ளப்பட்டது.

அதில் அவருக்குத் தொற்று உறுதி செய் யப்பட்டுள்ளது. இதையடுத்து சென்னை யில் உள்ள தனியார் மருத்துவமனையில் அவர் சிகிச்சை பெற்று வருகிறார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)



# தமிழகத்தில் கடும் பனி

சென்னை, டிசெ.25

தமிழகத்தில் மேலும் ஓரிரு தினங்களுக்கு கடும் பனிக் குளிர் நிலவும் என வானிலை மையம் தெரிவித்துள்ளது. தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை குறைந்து கடும் குளிர் மற்றும் பனி நிலவி வருகிறது.

இந்த நிலையில் மேலும் ஓரிரு தினங்க ளுக்கு குறைந்தபட்ச வெப்பநிலை இயல்பை விட 2 முதல் 3 டிகிரி செல்சி யஸ் வரை குறைவாகக் காணப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## இலங்கை இன்னொரு சோமாலியாவா?

''இலங்கையில் 2022ஆம் ஆண்டு மிகப்பெரிய உணவுப்பஞ்சம் தலைவிரித்தாடும். எனவே அதனை எதிர்கொள்ளும் வகையில் முன்னேற்பாடான நடவடிக்கைகளில் அரசாங்கமும் மக்களும் இப்போதே இறங்கவேண்டும். குறிப்பாக ஒவ்வொருவரும் உணவுப் பொருள்களை உற்பத்தி செய்யவேண்டும்'' என்ற முன்னெச்சரிக்கை அண்மைக்காலமாக பலதிசைகளில் இருந்தும் விடுக்கப்பட்டுவருகின்றது. விவசாய அமைச்சின் முன்னாள் செயலாளரும், பேராசிரியருமான உதித் கே. ஜயசிங்கவும் இதே கருத்தை அழுத்தம் திருத்தமாக முன்வைத்துள்ளார். அவரின் கருத்தை வழிமொழிந்திருக்கிறார் அமைச்சர் மஹிந்த அமரவீர.


நாட்டில் பெரும் பஞ்சநிலை ஒன்று ஏற்படப்போகின்றது என்பது இவர்கள் சொல்லித்தான் மக்களுக்குத் தெரியவேண்டுமென்பதில்லை. ஏனெனில் இப்போது தொடர்ச்சியாக நடைபெற்றுவரும் சம்பவங்களைப் பார்த்தும், கேட்டும், அறிந்தும் வைத்திருக்கும் ஒவ்வொருவருக்கும் இலங்கை மிகமோசமான பொருளாதாரப் பின்னடைவுக்குள் வலிந்து சென்று வீழ்வது நன்றாகவே தெரியும். இப்படியொரு பொருளாதாரத் தற்கொலையை நோக்கி இலங்கை நகர்வதற்கு முழுமுதற் காரணம், ராஜபக்சக்கள் மட்டுமே.

ராஜபக்சக்களிடம், தாம் எடுக்கும் முடிவெல்லாமே மிகச்சரியானவை என்ற மனோபாவம் இருக்கின்றது. ஒருவகையில் அதைத் தன்னம்பிக்கை என்று சொன்னாலும், ராஜபக்சக்களைப் பொறுத்தவரை அது ஆணவத்தின் அடையாளமாகவே இருக்கின்றது. இதன் வெளிப்பாடாக, அவர்கள் ஒரு முடிவை எடுத்துவிட்டால், அதை யார் சொன்னாலும் மாற்றவே மாட்டார்கள். அப்படி மாற்றினாலும்கூட விழுந்தும் மீசையில் மண்படவில்லை என்று காட்டுவார்கள். அதற்காக சுற்றிவளைத்து வேறு சில திணிப்புகளைச் செய்து கட்டம் கட்டமாகத்தான் தங்கள் பின்வாங்கலை நிகழ்த்துவார்கள். இரசாயன உரத்துக்கு திடீரென தடை போட்ட விடயத்தை இதற்கு நல்லதொரு உதாரணமாகச் சொல்லலாம். முதலில் இரசாயன உர இறக்குமதிக்கு அறவே அனுமதி இல்லை என்ற அரசாங்கம், பின்னர் ஒவ்வொரு கட்டமாக இறங்கி வந்து, இப்போது தனியார் உரத்தை இறக்குமதி செய்யப் பச்சைக்கொடி காட்டியுள்ளது. இப்படித்தான் ராஜபக்சக்களின் எல்லாத் திட்டங்களும், அவசர கதியில் எடுக்கப்பட்டு பின்னர் அவை விலக்கப்படுவதாகவே இருக்கின்றன. ராஜபக்ச அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின்னர் எத்தனை புதிய திட்டங்களுக்காக வெளியிடப்பட்ட வர்த்தமானிகளின் எண்ணிக்கைக்கு நிகராக, அந்தத் திட்டங்களை ரத்துச் செய்துவெளியிடப்பட்ட வர்த்தமானிகளும் இருந்தன, இருக்கின்றன. இப்படி 'எடுத்தோம், கவிழ்த்தோம்' பாணியிலான அறிவிப்புகளால் அல்லற்படுவது நாட்டு மக்கள் தான்.

இவ்வாறான அறிவிப்புகளால் உணவுப்பொருள் இறக்குமதி சீர்கெட்டுப் போயுள்ளது. இறக்குமதி இல்லாவிட்டாலும் உள்ளூர் உற்பத்தியாவது ஏறுமுகமாக இருக்கின்றதாவென்றால், அதுவுமில்லை. முன்னர் இருந்ததைக் காட்டிலும் உணவுப் பொருள் உற்பத்தி மோசமான கட்டத்தை எட்டியுள்ளது. எரிபொருள் விலையேற்றம், இரசாயன உரத்தடை என்பவற்றால் விவசாய நடவடிக்கைகள் தேங்கிவிட்டன. ஏராளமான விவசாயக் காணிகள் செய்கை பண்ணப்படாது வெறுமனே கிடக்கின்றன. பாரம்பரியமாக விவசாயத்தையே ஜீவனோபாயமாகக் கொண்டவர்கள் கூட அவற்றைக் கைவிட்டு, எந்தவேலை கிடைக்கிறதோ அதைச் செய்து வாழ்வாதாரத்தைக் கொண்டு நடத்தத் தொடங்கிவிட்டனர். இதேநிலை இன்னும் சில காலம் நீடித்தால், 'முன்னொரு காலத்தில் இலங்கையில் விவசாயமும் செய்யப்பட்டது' என்று சொல்லும் அவலமும் ஏற்படலாம்.

எரிபொருளும், இரசாயன உரமும் இல்லாவிட்டால் விவசாயம், உணவு உற்பத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளமுடியாதா? எமது முன்னோர் இவை எதுவும் இல்லாமலேயே உணவு உற்பத்தியில் தன்னிறைவு காணவில்லையா? என்றும் சில கேள்விகள் எழலாம். ஆனால், இப்போது எமது விவசாய, உணவு உற்பத்தி நடவடிக்கைகள் யாவுமே 'ஹைபிரிட்' யுகத்துக்குள் நுழைந்து, அதற்குப் பழக்கப்பட்டு விட்டோம். சடுதியாக மீளவும் பாரம்பரிய விவசாய, உணவு உற்பத்தி முறைமைக்குள் புகுவது என்பது நடைமுறைக்குப் பொருத்தமற்றதே. மெல்ல மெல்லத்தான் அந்த நிலையைக்கட்டியெழுப்ப முடியும். ஆனால் அதுவரை தாக்குப்பிடிக்க வேண்டுமே. எனவே நாடு சீராகும் வரை உணவுப்பற்றாக்குறையை ஈடு செய்யும் வகையில் மட்டுப்படுத்தப்பட்ட வகையில் உணவுப்பொருள் இறக்குமதி, இரசாயன உரப் பயன்பாடு என்பவற்றை மேற்கொள்வதோடு, உணவு உற்பத்திக்கு பயன்படும் எரிபொருளை மானிய அடிப்படையில் வழங்கவும் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

சகலரும் தத்தமது வீடுகளில் கட்டாயம் ஏதோவொரு உணவுப் பொருளைப் பயிரிடுதலை ஊக்கிவிக்கவேண்டும். மிகை உற்பத்திகளுக்கான நல்ல சந்தைவாய்ப்புகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படவேண்டும். நெகிழ்வான பசுமைப் புரட்சிக்கு வழிகோலவேண்டும். மாறாக சர்வாதிகாரத்துவமான பசுமை மாற்றத்தை கொண்டுவர நினைத்தால், அது படுதோல்வியில் முடிவடைவதோடு, எல்லோரும் எச்சரிப்பதைப் போல நாடு பஞ்சத்தில் வீழ்ந்து, இன்னொரு சோமாலியாவாக மாறிவிடும்.



# உண்மையை கூறுபவர்களின் குரல்வளையை நசுக்குவதா?

### அரசு மீது ஐ.தே.க. பாய்ச்சல்



**கொழும்பு, டிசெ. 25**

**நாட்டின் உண்மை நிலையை எடுத்துக் கூறும் அரச ஊழியர்களின் குரல்வளைகள் நசுக்கப்படும் என்பதையே, ஜனாதிபதியின் செயற்பாடுகள் எடுத்துக் காட்டுகின்றன. இவ்வாறான செயற்பாடுகளால் அரச ஊழியர்கள் மனச் சோர்வடைந்துள்ளனர் - என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் ருவன் விஜேவர்தன தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அடுத்த வருடம் நாட்டில் பஞ்சம் ஏற்படப்போகின்றது என்ற உண்மையை நாட்டுக்குக் கூறியதாலா, விவசாய அமைச்சின் செயலாளர் பதவி நீக்கப்பட்டுள்ளார்? என்பதை நாட்டு மக்களுக்கு ஜனாதிபதி உடனடியாக வெளிப்படுத்தவேண்டும்.

சேதனப் பசளைத் திட்டத்தை அவசரமாக நடைமுறைப்படுத்தியதாலேயே நெல், ஏனைய பயிர்களின் உற்பத்தி 75 வீதமாகக் குறைவடைந்துள்ளது என்று விவசாய அமைச்சின் செயலாளர் உதித் கே.ஜயசிங்க தெரிவித்திருந்தார். இதனை அவர் தெரிவித்து 24 மணித்தியாலங்களுக்குள் பதவிநீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

விவசாய அமைச்சின் செயலாளர் ஐக்கிய தேசியக் கட்சிக்கோ அல்லது எதிர்க்கட்சிக்கோ ஆதரவானவர் அல்ல. அவர் வியத்மகவை உருவாக்கியவர். ஜனாதிபதியாக கோத்தாபய ராஜபக்ச பொறுப்பேற்று இரண்டு வருடங்களுக்குள் விவசாய அமைச்சின் செயலாளர்களாக இருந்த மூவர் நீக்கப்பட்டுள்ளனர். நாட்டின் எதிர்காலம் தொடர்பில் தற்போதைய அரசிடம் எந்தவிதமான திட்டங்களும் இல்லை. ஆட்சிக்கு வந்து குறுகிய காலத்தில் மக்களால் வெறுக்கப்பட்ட அரசாங்கமாக தற்போதைய அரசாங்கம் இருக்கிறது - என்றார். (ம-4-இ)

# காரைநகர் கடற்பரப்பில் 365 கிலோ கஞ்சா மீட்பு

யாழ்ப்பாணம், டிசெ. 25

காரைநகர் கடற்பரப்பில் படகொன்றிலிருந்து 360 கிலோ கஞ்சா மீட்கப்பட்டுள்ளது. சந்தேகத்தின் பெயரில் இருவர் கைது செய்யப்பட்டனர்.



நேற்றுமுன்தினம் இரவு கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த கடற்படையினர் சந்தேகத்துக்கிடமாக நடமாடிய படகைச் சோதனைக்கு உட்படுத்தியபோது 10 பொதிகளில் சுற்றப்பட்ட நிலையில், மேற்படி கஞ்சாப் பொதிகள் மீட்கப்பட்டன. சந்தேகநபர்கள் ஊர்காவற்றுறை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (ம-4-125)

நாளை
26.12.2021
ஞாயிற்றுக்கிழமை
மார்கழி 11
சுபநேரம் : மு.ப. 09.27 - மு.ப. 10.57
ராகுகாலம் : பி.ப. 04.57 - மு.ப. 06.27

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மனிதம் மீட்கும் மன்னவா...!

ஆர்.பிரகாஷ்

மனிதம் என்றால் என்ன என்பதே தெரியாமல், அது தொடர்பான சொல்லாடல்கள் அற்பமாகவும், அர்த்தமற்றதாகவும் போய்க்கொண்டிருக்கும் இந்த நூற்றாண்டில் மனிதத்தின்பாலான தேடுதலுக்கு எம்மை ஆட்படுத்திக் கொள்வதென்பது தவிர்க்க முடியாததாகின்றது. மனிதம் என்ற தேடுதலுக்கு எம்மை உட்படுத்தும்போது நாம் நினைவில் கொள்ளவேண்டிய முதல் நபர் ஜெருசலேம் மைந்தன் இயேசுக்கிறிஸ்துவே. அவரின்றி மனிதமா..!!!

ஒவ்வொரு திருவருகைக்காலமும், தவக்காலமும் கிறிஸ்த வர்களாகிய எமக்கு இன்றியமையாவை. மனிதத்தை மீட்பதற்காக இயேசுக்கிறிஸ்து திருவருகைக் காலத்தில் பிறக்கின்றார். அதை நடைமுறைப்படுத்துவதற்காக தவக்காலத்தில் இறக்கின்றார். இதனால் இந்த இரண்டு காலங்களும் எம் ஆன்மிகப் பயணத்தில் ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்களைப் போன்றவையாக அமைகின்றன. ஆனால் இவை மனிதத்துக்கான புதுப்பித்தல் என்ற தெளிவோ அல்லது புரிதலோ எமக்கில்லை என்பதுதான் துயரத்திலும் பெரும் துயரம்.



## கேளிக்கையாக மாறிய கிறிஸ்மஸ் பண்டிகை!

சமீபத்தில் அவுஸ்திரேலியாவில் கிறிஸ்மஸ் பற்றி ஊடகங்களில் கேள்வி எழுப்பினார்கள். அதாவது கிறிஸ்மஸ் மரத்தை இனி அந்தப் பெயரால் அழைக்காமல் அதை 'விடுமுறை மரம்' என்று அழைக்கவேண்டும் என்று விவாதித்தார்கள். அதற்குக் காரணம் என்ன தெரியுமா? கிறிஸ்மஸ் தொடர்ந்து நாட்டில் விடுமுறைக் காலமாகவும், கொண்டாட்டக் காலமாகவும் இருந்துவருவதால் அதைக் கிறிஸ்துவோடு சம்பந்தப்படுத்திப் பேசுவதும், கிறிஸ்துவின் பிறப்பை நினைப்பூட்டுவதும் அவர்கள் காதுக்கு நாராசமாக இருக்கிறது.

ஒருபுறம் சமுதாயம் கிறிஸ்மஸ் தினத்தை வெறும் களியாட்ட நாளாக மட்டும் பயன்படுத்திவருகின்ற வேளை, மறுபுறம் கட்டடங்களை ஒளியூட்டி, அழகுபடுத்தி, மேடைகளில் இயேசுவின் பிறப்பை நடித்துக்காட்டி, குழந்தை இயேசு பற்றிய பாடல்களைப்பாடி, கிறிஸ்மஸ் தாத்தா கைநிறைய பரிசுப்பொருட்களைச் சுமந்து குழந்தைகளைப் குசிப்படுத்தும் நாளாக கிறிஸ்தவ சமுதாயம் ஆக்கி வைத்திருக்கிறது. கிறிஸ்மஸ் தினம் திருச்சபை வரலாற்றில் இருந்து வந்திருப்பதை நாம் மறுக்க முடியாவிட்டாலும், அது எதற்காக, எதை நினைவுபடுத்துவதற்காக, எதைச் செய்வதற்காக இருந்து வந்திருக்கிறது என்பதையாவது நினைத்துப் பார்க்கலாமல்லவா?

## இயேசுவின் பிறப்பு எதைக் காட்டுகிறது

இயேசுகிறிஸ்துவின் பிறப்பு என்பது அவருடைய மீட்பின் செயல்கள் பற்றிய இறையியல் போதனைகளில் இருந்து பிரிக்க முடியாத தொன்று. அவர் பிறக்கவே கூடாது என்று கங்கணம் கட்டி ஏரோது ஒருபுறம் போராடியிருக்க, இன்னொரு புறம், அவர் மரித்து உயிர்த்தெழவேயில்லை என்று நிரூபிக்க யூத ஆலயத்தலைவர்களும், உரோமர்களும் வரலாற்றில் போராடியிருக்கிறார்கள்.

இத்தனைக்கும் மத்தியில் வேதவார்த்தைகளின் படி மனித குமாரன் ராஜாவாக இந்த உலகத்தில் பிறந்து, மரித்து, உயிர்த்தெழுந்திருக்கிறார். இயேசு 'வரலாற்றில்' பிறக்காமல் அவருடைய மீட்பின் செயல்கள் நிகழ்ந்திருக்க வழியில்லை. அவருடைய பிறப்பு அதியற்புதமான பிறப்பு. அவரைப்போல இந்த உலகத்தில் பிறந்த ஒரு மதத்தலைவரைக் காணமுடியாது. அவருக்கு முன்னும் பின்னும் அப்படிப் பிறந்தவர்களில்லை. 'மனிதர்களில் ஒருவனும் இவனைப்போல சிறப்பாகப் பிறக்கவில்லை' என்று சொன்ன யோவான் ஸ்நானனுங்கூட இயேசுவைப்போலப் பிறக்கவில்லை.

இதிலிருந்து கிறிஸ்துவின் பிறப்பின் மகத்துவத்தை உங்களால் உணர முடிகிறதா? வார்த்தைகளால் பூரணமாக வர்ணிக்க முடியாத இத்தனை அற்புதமான இயேசுகிறிஸ்துவின் முதலாம் வருகையை வெறும் மரத்தையும், அலங்காரத்தையும், கிறிஸ்மஸ் தாத்தாவையும் வைத்துக் கொச்சைப்படுத்தலாமா? இப்படிக் கொச்சைப்படுத்துவதால்தானே கிறிஸ்மஸ் தினமே வேண்டாம் என்கிறார்கள் சில நல்ல கிறிஸ்தவர்கள். அவர்கள் கிறிஸ்துவின் பிறப்பை நிராகரிக்கவில்லை. கிறிஸ்மஸைக் கொண்டாட்டமாக்குவதைத்தான் நிராகரிக்கிறார்கள். கிறிஸ்துவின் பிறப்பில் நாம் ஆனந்தமடைவது தப்பா என்பீர்கள்? நிச்சயமாக அது தப்பில்லை. ஆனால் அது ஆன்மத்துக்கான ஆனந்தமாக இருக்கவேண்டும். கிறிஸ்மஸை உலக ரீதியிலான கொண்டாட்டமாக்குவது ஆன்மம் செய்யும் அட்டகாசச் செயல். அவர்களுக்கு கிறிஸ்துவின் பிறப்பின் மகத்துவம் புரியவில்லை என்பதை அது காட்டுகிறது. கிறிஸ்மஸைப் பண்டிகையாக்கிப் பாவத்தைச் சேர்த்துக்கொள்ளாதீர்கள்.

## அர்த்தம் உணர்ந்து கொண்டாடுவோம்

கிறிஸ்துவின் பிறப்பு நமக்கு எதைத் செய்திருக்கிறது என்பதைச் சிந்தித்துப் பாருங்கள்.

அது மனிதன் பாவத்தில் இருந்து விடுதலை அடைவதற்கான வழியை உருவாக்கியிருக்கிறது. பாவமாகிய கொடுமை மனிதனைப் பாதித்து அவனைச் சீரழித்து வைத்திருப்பதனாலேயே கிறிஸ்து மனித உருவெடுத்தார்; மரித்து உயிர்த்தெழுந்தார். பாவத்திலிருந்து விடுதலை அடைந்து ஆன்மீக வாழ்க்கையை இந்த உலகத்தில் வாழக் கிறிஸ்து வழியேற்படுத்தினார். அதற்கு அவருடைய பிறப்பு முக்கியம். அதிலல்லவா நாம் சந்தோஷப்பட வேண்டும்.

நாம் பெற்றிருக்கும் இரட்சிப்பு எத்தனை மகத்தானது என்பதை இயேசு கிறிஸ்துவின் பிறப்பும், வாழ்வும், சிலுவைப்பலி யும், உயிர்த்தெழுதலும் எமக்குக் காட்டுகிறது. பாவத்தின் கோரத்தையும் அதிலிருந்து பெற்றுக்கொண்ட விடுதலையையும் நினைத்து நினைத்து, அதில் திளைத்து ஆண்டவரைப் போற்றுவதில் அல்லவா நாம் ஆனந்தமடையவேண்டும். இதை உங்களுக்குள் ஏற்படுத்தாத கிறிஸ்மஸால் என்ன பயன்?

கிறிஸ்துவின் மகத்தான பிறப்பு, மனிதனை ஆட்டிப்படைக்கும் பாவத்திலிருந்து நித்திய விடுதலை இருக்கின்றது என்ற மாபெரும் செய்தியை மனிதனுக்கு அறைகூவலிட்டுச் சொல்லுகிறது. கிறிஸ்மஸ் இருக்கும்வரை இந்தச் செய்தியே அது உலகத்துக்கு அறிவிக்கும் நற்செய்தி. இயேசு கிறிஸ்துவில் வைக்கின்ற விசுவாசம் மட்டுமே அந்த விடுதலையைக் கொடுக்கும் என்பதை உலகுக்கு அறிவிக்க இயேசு பிறந்தார். அவருடைய பிறப்பு பாவ நிவாரணத்துக்கான சிலுவைப்பலிக்கு அடித்தளமிட்டது.

மனிதனே! மனந்திரும்பி நீ இயேசு கிறிஸ்துவை விசுவசி, உன்னுடைய பாவவிடுதலைக்கான அனைத்தையும் இயேசு பூரணமாகச் செய்து முடித்திருக்கிறார்.


உன்னால் செய்ய முடியாததை அவர் செய்திருக்கிறார். தன்னுடைய இரத்தத்தைச் சிந்தி உனக்காக உன்னுடைய இடத்தில் தன்னையே பலியாகத் தந்திருக்கிறார். அவரிடம் இன்றே வந்து அவரை விசுவாசித்து உன் பாவங்களுக்கான மன்னிப்பைப் பெற்றுக்கொள், அவரை மட்டுமே ஆண்டவராக நம்பி வாழு, பரலோகத்தில் அவரோடு வாழும் நித்திய வாழ்க்கையைப் பெற்றுக்கொள், காலத்தை வீணாக்காதே, இப்போதே அவரிடம் வா! என்று அறைகூவலிடுகிறது. மனிதம் மீட்கும் மன்னவனுடன் இணைந்து வாழ்வில் தொடர்ந்து பயணிப்போம். எமது பயணம் மனிதத்தை நோக்கிய அர்த்தமுள்ள பயணமாக இருக்கட்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவையில் இருப்போருக்கு தவறாது உதவிசெய்வோம்

## நத்தார் வாழ்த்துச் செய்தியில் திருமலை ஆயர் நோயல் இம்மனுவல் ஆண்டகை தெரிவிப்பு

பேரிடர் காலமான இக்காலத்தில், தேவையில் உள்ளோருக்கு உதவுவதன் மூலம் அவர்களின் மகிழ்ச்சியில் கடவுளைக் காணலாம். இவ்வாறு தெரிவித்தார் ஆயர் நோயல் இம்மனுவல் ஆண்டகை. அவர் அனுப்பிவைத்துள்ள நத்தார் தின வாழ்த்துச் செய்தியில் மேலும் உள்ளதாவது:



கிறிஸ்து பிறப்புப் காலம் மகிழ்ச்சியின் காலம், பகிர்வின் காலம். 'குழந்தையைத் துணிகளில் சுற்றித் தீவனத் தொட்டியில் கிடத்தியிருப்பதைக் காண்பீர்கள்' என்பது வான தூதர்கள் இடையர்களுக்குக் கொடுத்த அடையாளம். இறைவன் தன்னைப் பலவழிகளிலும் வெளிப்படுத்துகின்றார். இறைவாக்கு நூல்கள், மனிதர், அடையாளங்கள், அனுபவம், சம்பவங்கள் மூலமாக இறைவன் தனது பராமரிப்பையும் செய்தியையும் வெளிப்படுத்துகின்றார்.

தமக்கு எதுவுமே தெரியாது என அறிந்து பணிவோடு ஏற்பவர்கள் இடையர்கள், தமக்கு எல்லாம் தெரியாது என ஏற்பவர்கள் ஞானிகள். இவ்விரு பிரிவினருக்கும் இறைவன் தன்னை வெளிப்படுத்தினார். இன்று நாம் தேவையில் இருப்போரை நாடிச்சென்று உதவும்போது இறைவனை அவர்களின் மகிழ்ச்சியில் காணலாம். இதையே இறைவன் எம்மிடமிருந்து இக்காலத்திலும் எக்காலத்திலும் எதிர்பார்க்கின்றார்.

கிறிஸ்து பிறப்பு பகிர்வின் காலமாகும். இறைவன் தன் ஒரேமகன் இயேசுவை உலகுக்கு அனுப்புவதன் மூலமாக தனதன்பைப் பகிர்ந்து கொண்டார். இப்பகிர்வில் நாம் மகிழ்கின்றோம். கொரோனாத் தொற்றினாலும் பலவகையான துன்பங்களாலும் துயருறும் எம் சகோதர சகோதரிகளை நினைத்து எம்மிடமுள்ளதை தேவையில் இருப்போருடன் பகிர்ந்து அவர்கள் மகிழ்ச்சியில் இன்பம் காண்போம் - என்றுள்ளது. (ம)

# துயரங்களுக்கு விடிவெள்ளியாக பாலன் பிறப்பு அமையட்டும்!

## கிறிஸ்மஸ் வாழ்த்துச் செய்தியில் மன்னார் ஆயர் தெரிவிப்பு

மன்னார், டிசெ. 25

கொரோனாத் தொற்று நோயின் தாக்கம், அதிக மழை வீழ்ச்சியினால் ஏற்பட்ட வெள்ள இடர், விலைவாசி உயர்வு, இரசாயனப் பசளைகளின் தட்டுப்பாடு என எமது வாழ்க்கை பெரும் சுமையாக மாறியுள்ள இந்த இக்கட்டான சூழ்நிலையில் கிறிஸ்மஸ் விழா எமக்கு நம்பிக்கையை வழங்குகின்றது என மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மனுவல் பெர்னாண்டோ ஆண்டகை தெரிவித்துள்ளார்.

கிறிஸ்மஸ் விழாவையொட்டி மன்னார் மறைமாவட்ட ஆயர் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது.

மீண்டுமொரு கிறிஸ்மஸ் விழாவை நாம் எதிர்நோக்கி இருக்கின்றோம். இன்றைய எமது நாட்டின் வாழ்க்கைச் சூழ்நிலை எம் எல்லோருக்கும் நம்பிக்கை அற்றதாக, கவலையளிப்பதாக இருக்கின்றது. எத்தகைய சூழ்நிலையிலும் நாம் நம்பிக்கை இழக்காமல் வாழ வேண்டும் என்பதையே இந்த விழா எமக்குச்சொல்லித் தருகின்றது.



கொரோனாத் தொற்று நோயின் தாக்கம், அதிக மழை வீழ்ச்சியினால் ஏற்பட்ட வெள்ள இடர், விலைவாசி உயர்வு, இரசாயனப் பசளைகளின் தட்டுப்பாடு என எமது வாழ்க்கை பெரும் சுமையாக மாறியுள்ளது. இத்தகையதொரு இக்கட்டான சூழ்நிலையில் இந்த கிறிஸ்மஸ் விழா நமக்கு நம்பிக்கையை வழங்குகின்றது. ஆறுதலின், மகிழ்ச்சியின் செய்தியைத் தருகின்றது.

அதாவது நாம் நம்புகின்ற கடவுள் எங்கோ ஆகாய மேகங்களில் வாழ்கின்ற கடவுள் அல்ல. மாறாக அவர் நம்மோடு வாழுகின்றார். 'வாக்கு மனிதர் ஆனார் நம்மிடையே குடிகொண்டார்' என்ற இறைவாக்குக்கு ஒப்ப, இயேசுவின் பிரசன்னத்தை உடனிருப்பை ஆழமாக உணருகின்ற கிறிஸ்மஸ் விழாவை நாம் கொண்டாடவுள்ளோம். விண்ணில் இருந்து விடியல் நம்மைத் தேடி வரும். இந்த நாள்களில் நாம் நம்பிக்கையில் தளர்வுறாது தொடர்ந்து செயலாற்றுவோம் - என்றுள்ளது. (ம-60-56)

வாழக்கையாளர்களுக்கு எமது நன்றி கலந்த நத்தார், புதுவருட வாழ்த்துக்கள்.

எதிர்வரும் **01.01.2022 இல் இருந்து கியூட் பேபி (Cute Baby), நைஸ் அன்ட் கிளீன் வைப்ஸ் (Nice and Clean)** ஆகியவற்றின் **வடபுல விநியோகஸ்தர்களாக செயற்படுவோம்** என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறோம்.

மருந்தகங்கள் மற்றும் ஏனைய விற்பனையாளர்களுக்கு விசேட விலைக்கழிவு உண்டு.




வனிக்கா சேஜிக்கல்ஸ்
203, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

077 442 2367, 077 510 6910
Email : vanisurgi@sltnet.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிறந்திருக்கும் இயேசுபாலகன் தமிழர்களுக்கு விடிவு தரட்டும்!

## முன்னாள் எம்.பி. சரவணபவன் வாழ்த்து



பிறந்திருக்கும் இயேசுபாலகன் சுமூகமான சமூகச் சூழலில், அரசியல் பொருளாதார வாழ்வாதார கலாசார உறுதிப்பாடுகளுடன் தமிழ்ச் சமூகம் மீண்டெழ அருள் புரியவேண்டுமென்று நாம் பிரார்த்திப்போம். இவ்வாறு தனது கிறிஸ்மஸ் வாழ்த்துச் செய்தியில் குறிப்பி ட்டுள்ளார் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவன்.

அவர் அனுப்பிவைத்துள்ள வாழ்த்துச் செய்தியில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது: இன்று உலகெங்கும் வாழும் கத்தோலிக்கர்களும், கிறிஸ்தவர்களும் இயேசு கிறிஸ்துவின் பிறப்பைப் பெரும் மகிழ்ச்சியுடன் கொண்டாடிக் கொண்டிருக்கின்றனர். எனினும் இலங்கைத் திருநாட்டில் வாழும் நாம் இந்தத் திருவிழாவை பல்வேறு சங்கடங்களுக்கும், சஞ்சலங்களுக்கும் மத்தியில் எதிர்கொண்டுள்ளமை மனவருத்தத்தைத் தருகின்றது. பொருளாதாரத்தில் உறுதிப்பாடற்ற தன்மை வலுப்பெறுவதை நாளுக்கு நாள் அவதானிக்கக்கூடியதாக உள்ளது. வாழ்வாதாரத்தையும் பொருளாதாரத்தையும் தொலைத்தவர்களாக பல்லாயிரம் மக்கள் இங்கு அங்கலாய்த்துக் கொண்டுள்ளோம். மட்டுமல்லாமல் தமிழர் தாயகமும்கூட பல்வேறு நெருக்கடிகளுக்குள்ளேயே இந்தத் திருநாளை வரவேற்றுள்ளது. இத்தகைய இடர்பாடுகளையும், துன்பியல்களையும் பிறந்திருக்கும் பாலகன் இயேசு துடைத்தெறிந்து இலங்கைத் தீவு சகோதரத்துவம், சமத்துவம், சுபீட்சம் என்பனவற்றை இலக்காகக் கொண்டு பயணிக்க அருள் பாலிக்க வேண்டும் என்று பிரார்த்திக்கின்றேன். மீட்பராம் இயேசுகிறிஸ்துவின் பிறப்பு விழாவானது எம் துன்பியல்களில் இருந்து எம்மை மீட்டெடுக்கும் என்ற நம்பிக்கையுடன் பயணப்படுவோம்-என்றுள்ளது. (ம)

அனைத்து வாடிக்கையாளருக்கும் நத்தார் தின நல் வாழ்த்துக்கள்

யாழ் மண்ணில் பிரமாண்டமான தயாரிப்பில்
இல்லத்தரசிகளின் அரசன் V.S.P நல்லெண்ணெய்
V.S.P நல்லெண்ணெய்
SPECIAL GINGELLY FOOD OIL
சுத்தமான முறையில் உணவுக்காக விசேடமாகத் தயாரிக்கப்பட்டது
தாயின் அன்பைப்போல நம்பிக்கையானது V.S.P நல்லெண்ணெய்
போலிகளைக் கண்டு ஏமாறாமல் V.S.P நல்லெண்ணெய் வாங்கும் போது பரிமளா ஸ்ரோர்ஸ் எனும் பெயரைப் பார்த்து வாங்கவும், சந்தேகம் இருப்பின் எமது தொலை பேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.
உரிமையாளர் : திருமதி பாஸ்கரன்
குடும்பத்தின் ஆரோக்கியத்துக்கும் மகிழ்ச்சிக்கும் காரணம் V.S.P நல்லெண்ணெய்
தயாரிப்பாளரும் ஏக விநியோகஸ்தரும் : பரிமளா ஸ்ரோர்ஸ்
முட்டாஸ் கடைச் சந்தி, K.K.S வீதி அருகாமை, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 021 222 4135, 021 222 9165
திருகோணமலையில் நியூ சிறி விநாயகர் சுப்பர் மார்க்கட் 60, திருஞானசம்பந்தர் வீதி, திருகோணமலை T.P : 077 304 4462
மட்டக்களப்பு வாழ் மக்களின் நன்மை கருதி சண்முகா ஏஜென்சி 159, திருமலை வீதி, மட்டக்களப்பு H.L : 077 990 4636 T.P : 065 222 2139 065 222 5380
கொழும்பில் விற்பனையாளர் மகாராஜா பூட்சிற்றி 18/3, Dr.E.R.Cooray, Mawatha, Wellawatta, Colombo - 06 T.P : 011 236 0926, 011 465 4444
வவுனியாவில் விற்பனையாளர் சுகந்தன்ஸ் 13A. மன்னார் வீதி, வவுனியா T.P : 024 222 3348, 077 020 9495
(CR 36713)(3/6)

அனைவருக்கும் இனிய நத்தார் வாழ்த்துக்கள்
வாயுபுத்ரா போன் சொப்
Vayuputhra
Phone Shop, Oppo & Vivo Distributors


அனைத்து விதமான கட்டணங்களையும் இங்கு மேற்கொள்ளலாம்.
All Types of Recharge Available Here
அனைத்து சேவைகளும் நியாயமான விலையிலும் துரித வேகத்திலும் பெற்றுக் கொள்ளலாம்.
வாயுபுத்ரா புக்கிங் சென்றர் சகல விதமான பேருந்துகளுக்கும் ஆசனப் பதிவுகளைமேற்கொள்ள முடியும்.
[illegible] யாழ் ⇆ கொழும்பு (தினமும்)

அனைவருக்கும் இனிய நத்தார் வாழ்த்துக்கள்
சசிகா லேணர்ஸ்
THE SASIKA LEARNERS
அரச அங்கீகாரம் பெற்ற சாரதி பயிற்சிப் பாடசாலை
Reg.No: DS882
உரிமையாளரின் தொடர்புக்கு 0777 226 247 / 077 614 0361
email: sasikadrivingschool@gmail.com web: sasikalearners.com

தலைமைக்காரியாலயம் இல.57, வேம்படி வீதி, யாழ்ப்பாணம்.
021 221 7578 / 7678
070 301 3011
கிளைக் காரியாலயங்கள்:
மல்லாகம் T.P: 021 224 3393 070 301 3014 077 343 6622
பண்டத்தரிப்பு T.P: 021 225 2333 071 255 4135 077 434 3798
சங்கானை T.P: 021 225 1664 070 301 3016 077 434 3149
சாவகச்சேரி T.P: 021 227 0616 071 577 0616 077 435 3995
[illegible] (Town) T.P: 021 222 8004 070 301 5004 070 301 3017 077 998 6247
நெல்லியடி T.P: 021 226 0999 071 775 0999 077 261 2446
புன்னாலைக்கட்டுவன் T.P: 021 224 5001 076 384 0684
காரைநகர் T.P: 021 225 2454 070 510 2484
வேலணை : T.P: 021 221 5472, 070 301 3012

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தினமும் புதுவருட கொண்டாட்டம்

ROOMS | EAT IN | DELIVERY | OUT DOOR CATERING | FUNCTION HALL |

சைவம் - அசைவம்



சுடச்சுட யாழ் ஒடியல் கூழ்,
பிரியாணி ஆடு / கோழி புக்கை
பால் / முட்டை அப்பம்,
மட்டன் ரோல்ஸ் / பட்டீஸ்,
சிக்கன் ரோல்ஸ் / பட்டீஸ்,
இட்டலி வடை, தோசை,
பிறைட் றைஸ், நூடில்ஸ்
BBQ பகல் / இரவு உணவுகள்,
விஷேட இந்தியன்
செட்டிநாடு உணவுகள்,
கொத்துப் புட்டு, இடியப்பம்,
றொட்டி, சூப், Pork/Beef பைற்ஸ்
மேலும் பல உணவுகள்,

உங்கள் கொண்டாட்டங்கள் அனைத்திற்கும் உள் - வெளி மண்டப வசதிகள் அல்லது உங்கள் இல்லங்களில் மற்றும் தொழிலகங்களில் உணவு பரிமாற்றம் (CATERING) செய்துதரப்படும்

(cr.36707)

**Virounthu @ Yarl pardy & Express யாழ்பாடி**

49-51, அம்மன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
Tel: 021 222 6868, 0759 875 800, 0777 360 353
tysunda@gmail.com

# கடினமான காலங்களில் இருந்து விடியலைத் தரட்டும் கிறிஸ்மஸ்

## எதிர்க்கட்சித் தலைவர் வாழ்த்து



பெருந்தொற்றுக் காரணமாக இலங்கைக்கும் உலகத்துக்கும் கடினமான நாள்களாக ஆகிப்போயுள்ள இக்காலத்தில், பிறந்திருக்கும் பாலன் இயேசு எம் ஒவ்வொருவர் வாழ்விலும் விடியலைக் கொண்டுவர வேண்டும் இவ்வாறு தனது கிறிஸ்மஸ் தின வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார் எதிர்க்கட்சித் தலைவரான சஜித் பிரேமதாஸ.

அவர் அனுப்பிவைத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் உள்ளதாவது:

அன்பு, அமைதி மற்றும் சகோதரத்துவத்தின் கருப்பொருளான நத்தார் தினம், கிறிஸ்தவர்களின் சமயப் பண்டிகை மட்டுமல்ல, இனம், மதம், கட்சி, நிறம், சிறியோர், இளைஞர்கள், பெரியவர்கள் என்ற பேதமின்றி உலகெங்கிலும் உள்ள எண்ணற்ற மக்களால் கொண்டாடப்படும் கலாசார விழாவாகும்.

'நல்லவன் தன் இதயத்தில் நல்லதை விதைப்பான், கெட்டவன் தன் இதயத்தில் கெட்டதை விதைப்பான்' என்று வேதாகமத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. சிறந்த விதத்திலும், மனிதாபிமானம் நிறைந்த விதத்திலும் நாட்டுக்கும், உலகுக்கும் தன்னை அர்ப்பணிக்க ஆண்டவர் இயேசு வழிகாட்டியுள்ளார் என்பதை இது காட்டுகிறது.

இயேசுநாதர் உலகுக்கும், அனைத்து நாடுகளின் மக்களுக்கும் கொண்டுவந்த அன்பு மற்றும் கருணையின் மகத்துவத்தை மனிதகுலம் முன்மாதிரியாகப் பின்பற்றி நத்தார் விடியலைக் கொண்டாடுவது அவசியம். இதயத்தை சோகப்படுத்தும் தீய எண்ணங்களை அழித்து, நத்தாரின் உண்மையான அம்சத்தை உணர்ந்து, அன்பான குடிமகனாக ஒருவரின் வாழ்க்கையை வடிவமைக்க நத்தார் தினம் பெரும் உதவியாக உள்ளது.

முனிவர்கள் கண்ட நட்சத்திரம், இயேசு குழந்தை வாழ்ந்த மாட்டுத் தொழுவத்தின் மேல் வானத்தின் ஒளிப்பிரகாசத்துடன் எல்லையற்ற அன்பும் அமைதியும் தரும் செய்தியை எடுத்துரைத்த ஆண்டவர் இயேசுவின் பிறப்பானது உலகுக்கு ஒளிக்கீற்றைக் கொண்டு வந்தது.

இன்று இலங்கையர்களுக்கும் உலகெங்கிலும் உள்ள மக்களுக்கும் மிகவும் கடினமான காலமாகும். ஒரு வைரஸ் இரண்டு ஆண்டுகளாக மனித வாழ்க்கையின் இயல்பான செயற்பாட்டை முழுமையாகக் கட்டுப்படுத்தியுள்ளது. இந்தப் பெருந்தொற்றில் இருந்து ஒரு மீட்சியை பிறந்திருக்கும் பாலன் இயேசு எமக்குத் தரட்டும் - என்றுள்ளது.

(ம)

அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் நத்தார் தின நல் வாழ்த்துக்கள்

**ஏசியன்** தளபாட நிலையத்தின் புதிய கிளை திறப்பு விழாவை முன்னிட்டு

**நத்தார் பண்டிகை மாபெரும் விலைக்கழிவு**

**Electronic & Furniture**

**washing machine (innovex) 5year warranty**

| | | | |
|---|---|---|---|
| Fully Automatic | (6 kg) | ~~55250~~/- | 40200/- |
| | (7 kg) | ~~67500~~/- | 45100/- |
| Semi Automatic | (6.5 kg) | ~~37500~~/- | 29500/- |



**Fridge (innovex) 10 year warranty**

| | | | |
|---|---|---|---|
| Single Door | 180 Ltr | ~~61900~~/- | 44990/- |
| Double Door | 180 Ltr | ~~65000~~/- | 48150/- |
| | 240 Ltr | ~~70000~~/- | 52100/- |
| | 250 Ltr | ~~85000~~/- | 63900/- |
| Inverter | 250 Ltr | ~~92900~~/- | 69450/- |



**Television (innovex) 3 year warranty**

| | | |
|---|---|---|
| 32 ``LED TV | ~~45000~~/- | 36150/- |
| 40" LED TV | ~~79000~~/- | 62950/- |



**Piyestra**

Matters (Piyestra)

| | | |
|---|---|---|
| Single (D/L) 6 x 3 | ~~5400~~/- | 3850/- |
| Double (D/L) 6 x 4 | ~~7050~~/- | 4970/- |



**Plastic Verandah Chair (Piyestra)**
(6 Chair + Teapow) ~~10160~~/- 8100/-



**Sofa3 + 1 + 1 (warranty Rexin - 2years Body - 10 Years** ~~60000~~ 49000/-

Piyestra sofa's and Office Furnitures 15% Discount
Piyestra Bedroom Suits 12.5% Discount

INNOVEX Piyestra Nilkamal Panasonic Hisense DAXER

114, Navalar Road, Jaffna. 021 222 6898

அனைவருக்கும் இனிய நத்தார் வாழ்த்துக்கள்

**யாழ். வீரசிங்கம் மண்டபத்தில்**

திருமண பட்டுப் புடைவைகளின் பூங்காவனம்

# இந்தியன் செலக்ஷனின்

**விசேட விலைக் கழிவுகள்**

**இம்மாதம் 16ம் திகதி முதல்**

நத்தார் பண்டிகை, மற்றும் புதுவருடத்தை முன்னிட்டு

அரச சட்டதிட்டங்களுக்கு அமைவாகவும் சுகாதார வழி முறைகளுக்கு அமைவாகவும் இந்தியன் செலக்ஷனின் நத்தார் மற்றும் புதுவருட மலிவு விற்பனை நடைபெறும் என்பதனை மகிழ்ச்சியோடு வாடிக்கையாளர்களுக்கு தெரிவித்து கொள்கின்றோம்.





பட்டுச்சாறிகள் கொட்டன் சாறிகள், சல்வார்கள், சல்வார் துணிகள், டொப் வகைகள் சிறுவர், சிறுமியருக்கான ஆடைத் தெரிவுகள் மற்றும் ஆண் பெண் இருபாலாருக்குமான ஆடைத் தெரிவுகள்

(cr.36726) (3.6)

காலம் : 16.12.2021 முதல் 31.12.2021 வரை
இடம்: வீரசிங்கம் மண்டபம், யாழ்ப்பாணம்.
ஞாயிற்றுக்கிழமைகளிலும் திறந்திருக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம்பிக்கை நிறைந்த எதிர்பார்ப்புடன் நத்தாரை அர்த்தமுள்ளதாக்குவோம்

## பிரதமர் மஹிந்த நத்தார் வாழ்த்து



கொரோனாத் தொற்று நிலைமைக்கு மத்தியில் வீழ்ச்சியடைந்த உலகை மீள புத்துயிர் பெறச் செய்வதுடன், நம்பிக்கை நிறைந்த எதிர்பார்ப்புகளுடன் நத்தார் தினத்தை அர்த்தமுள்ளதாக மாற்றுவோம் என்று தனது நத்தார் வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார் பிரதமர் மஹிந்த ராஜபக்ச.

அவர் அனுப்பிவைத்துள்ள வாழ்த்துச் செய்தியில் மேலும் உள்ளதாவது:

அமைதி மற்றும் அன்பின் அடையாளத்தை இப்பூவுலகில் விட்டுச் சென்ற இயேசு கிறிஸ்துவின் பிறப்பை நத்தார் நினைவூட்டுகிறது.

இறைவனின் அன்பும், மனித கண்ணியமும் மனிதநேயத்தை அடிப்படையாகக் கொண்ட சமுதாயத்துக்கு நம்பகமான அடித்தளமாக அமைந்தது. பெத்லகேமில் மாட்டுத் தொழுவத்தில் பிறந்த இயேசுகிறிஸ்து, இவ்வுலகை யதார்த்தமாக நோக்குவதற்கு அவரது பிறப்பு முதலே முன்மாதிரியாக திகழ்ந்தார்.

நல்லுள்ளம் படைத்தவர்கள் அமைதியைப் பகிர்ந்து கொள்வார்கள். தம் மீது வெறுப்புக் கொண்டவர்கள் மீதும் அன்பு காட்டுபவர்களாக திகழ்வார்கள். அன்பு, அமைதி மற்றும் சகோதரத்துவம் ஆகியவற்றின் பொருள் உணர்ந்து தமது வாழ்க்கையை உயிர்ப்பித்துக் கொள்வர்.

சமுதாயத்தில் ஒடுக்கப்பட்ட மக்களை விடுவிக்கவும், இவ்வுலகில் சிறந்த சமுதாயத்தை உருவாக்குவதற்காகவுமே இயேசு கிறிஸ்து தனது முழு வாழ்நாளையும் அர்ப்பணித்தார்.

அந்த வெளிப்பாட்டை சரியான முறையில் உணர்ந்து, இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கை முறைக்கு ஏற்ப தங்கள் வாழ்க்கையை அமைத்துக் கொள்வதன் மூலம் ஒவ்வொரு கிறிஸ்தவரின் வாழ்க்கையும் ஒளிமயமாகும்.

கொரோனாத் தொற்று நிலைமைக்கு மத்தியில் வீழ்ச்சியடைந்த உலகை மீளப் புத்துயிர் பெறச் செய்வதுடன், நம்பிக்கை நிறைந்த எதிர்பார்ப்புகளுடன் நத்தார் தினத்தை அர்த்தமுள்ளதாக மாற்றுவது உங்களுடைய பொறுப்பாகும்.

'நட்சத்திர ஒளியும், கிறிஸ்துவின் பிறப்பும், உலகை உயிர்ப்பிக்கும்' எனும் தொனிப்பொருளில் அலங்கரிக்கப்படும் இவ்வருட நத்தார் தினம் ஒட்டுமொத்த உலகவாழ் மற்றும் இலங்கை வாழ் கிறிஸ்தவ மக்களுக்கு அர்த்தமுள்ள மற்றும் மகிழ்ச்சியான நாளாக அமைய வேண்டும் எனப் பிரார்த்திக்கிறேன் என்றுள்ளது.

# கடவுள் என்றும் எம்முடன் உள்ளார்

## கிறிஸ்து பிறப்புவிழா உணர்த்துவதும் அதையே யாழ். மறைமாவட்ட ஆயர் நத்தார் வாழ்த்து



நீங்கள் உங்கள் வீடுகளிலும் பொது இடங்களிலும் அமைக்கும், கிறிஸ்து பிறப்பைச் சித்திரிக்கும் கிறிஸ்மஸ் குடிலும் அதனோடு இணைந்த கிறிஸ்மஸ் மரமும் சோடினைகளும் கடவுள் நம்மோடு இருக்கிறார் என்ற உண்மையான நம்பிக்கையின் அடையாளங்களாக அமையட்டும் என்று தனது நத்தார் வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார் யாழ்ப்பாணம் மறைமாவட்ட ஆயர் கலாநிதி ஜஸ்ரின் பேணாட் ஞானபிரகாசம் ஆண்டகை.

அவர் அனுப்பியுள்ள வாழ்த்துச் செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

2021ஆம் ஆண்டின் கிறிஸ்து பிறப்பு பெருவிழா இன, மத, நிற, மொழி வேறுபாடின்றி உலகம் முழுவதிலும் கொண்டாடப்படும் இவ்வேளை முதலில் பாலகன் இயேசுவின் அன்பும் அருளும் ஆசீரும் என்றும் உங்கள் அனைவரோடும் இருப்பதாக என வாழ்த்துகிறோம்

வாக்கு மனிதனானார். நம்மிடையே குடிகொண்டார் (யோவான் 1:114) என யோவான் நற்செய்தியாளர் கடவுள் நம்மோடு இருக்கிறார் என்ற உண்மையைத் தெளிவுபடுத்துகிறார். கடவுள் என்றும் நம்மோடு இருக்கிறார் என்ற இந்த உண்மையை சிறப்பாக உணர்த்தும் காலம் கிறிஸ்து பிறப்பு விழா காலமாகும்.

கடவுள் என்றும் நம்மோடு இருக்கிறார் என்ற இந்த உண்மையையும் கிறிஸ்து பிறப்பின் ஒளியையும் மகிழ்வையும் நம்பிக்கையையும் எமது எந்தத் துன்பமான அல்லது இக்கட்டான அனுபவமும் என்றும் குறைத்துவிட முடியாது.

நீங்கள் உங்கள் வீடுகளிலும் பொது இடங்களிலும் அமைக்கும், கிறிஸ்து பிறப்பைச் சித்திரிக்கும் கிறிஸ்மஸ் குடிலும் அதனோடு இணைந்த கிறிஸ்மஸ் மற்றும் சோடினைகளும் கடவள் நம்மோடு இருக்கிறார் என்ற உண்மையான நம்பிக்கையின் அடையாளங்களாக அமையட்டும்.

இந்த அடையாளங்களின் வெளி அர்த்தத்தை தாண்டிச் சென்று அவற்றின் வழியாக வெளிப்படுத்தப்படும் இறை இருப்பையும் இறை அன்பையும் மனமகிழ்வையும் உங்கள் மனதுகளில் முழுவதுமாக உணர்ந்து இயன்றவரை மற்றவர்களோடு பகிர்ந்து கொள்ளுங்கள்.

இன்றைய இக்கட்டான நிலையில் உங்களால் இயன்றவரை இயலாமையில் வாடுவோர் தேவையில் இருப்போர் துன்பத்தை அனுபவிப்போர் வைத்தியசாலையில் துன்பப்படுவோர் சிறைச்சாலைகளில் வாடுவோர் போன்ற அனைவருக்கும் அன்புக்கரம் நீட்டுங்கள் - என்றுள்ளது.

# துயரில் உள்ள மக்கள் மீது நம்பிக்கை ஒளி வீசட்டும்!

துயரில் உள்ள மக்கள் மீது நம்பிக்கை ஒளி வீசட்டும். சமாதான வாழ்வும் நன்மையும் உள்ள சூழலையும் இயேசு கிறிஸ்துவின் பிறப்புக் கொண்டுவரட்டும் என்று தனது வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார் யாழ். மாவட்ட கிறிஸ்தவ சம்மேளன செயலாளர் ராசு.கண்ணன்.

அவர் அனுப்பியுள்ள வாழ்த்துச் செய்தியில் மேலும் உள்ளதாவது:

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து இவ்வுலக மக்களின் பாவங்களைச் சுமந்து தீர்க்கும் மீட்பராக இவ்வுலகில் அவதரித்ததை மகிழ்ச்சியுடன் கொண்டாடும் இந்த நாளில், உலகின் ஒளியாகப் பிறந்த இயேசுவின் கீற்றொளி இருளில் உள்ள மக்கள்மீது வீசி தூய வாழ்வையும் நன்மையையும் சமாதானத்தையும் உண்டுபண்ணட்டும் - என்றுள்ளது. (ம)

# ஒமிக்ரோன் தொற்றுடன் பலர் நாட்டில் இருப்பர்!

## பொ.சு.ப.சங்கம் எச்சரிக்கை



**கொழும்பு, டிசெ. 25**

**தற்போது நாட்டில் இனங்காணப்பட்டுள்ள ஒமிக்ரோன் தொற்றாளர்களுடன் ஒப்பிடும்போது, அவர்களில் தொடர்பாடல்களை வைத்துப் பார்க்கும்போது நாட்டில் பலருக்கு ஒமிக்ரோன் தொற்று இருக்கலாம் என்று பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் எச்சரித்துள்ளது.**

இது தொடர்பில் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண தெரிவிக்கையில்,

ஒமிக்ரோன் வைரஸ் தொற்றுடன் நாட்டில் மேலும் மூவர் இனங்காணப்பட்டுள்ளனர். இவர்களின் தொடர்பாடல்களை வைத்துப் பார்க்கும் போது ஒமிக்ரோன் வைரஸ் தொற்றுடன் பலர் நாட்டுக்குள் இருக்கக்கூடும் என்பது தெளிவாகத் தெரிகின்றது.

அடுத்த மூன்று வாரங்களில் நாடு முழுவதிலும் ஒமிக்ரோன் வைரஸ் பரவி, தொற்றாளர்கள் அநேகமாக இனங்காணப்படக்கூடிய ஆபத்துக் காணப்படுகின்றது. ஒமிக்ரோன் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்குமாயின், நாடு மோசமான நிலைமைகளைச் சந்திக்கும் - என்றார். (ம-4-இ)

# முதியோரை மகிழ்வூட்டிய சஜித்

கொழும்பு.டிசெ.25

நீர்கொழும்பில் உள்ள முதியோர் இல்லத்தில் நடைபெற்ற நத்தார் நிகழ்வில் பங்கேற்ற, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கிட்டார் இசைத்து, கிறிஸ்மஸ் கீதங்களைப் பாடி முதியோரை மகிழ்ச்சிப்படுத்தினார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜெயவர்தன ஏற்பாடு செய்திருந்த நிகழ்வில், பங்கேற்ற அவர், முதியோருடன் மகிழ்ச்சியாக உரையாடினார். அவர்களுடன் சில மணி நேரத்தைச் செலவிட்டார். (ம-4-இ)



கொழும்பு மற்றும் கல்கிஸ்ஸ முன்பள்ளி மாணவர்களின் வருடாந்த நத்தார் கரோல் இசை நிகழ்வு, மாளி[illegible] முன்பள்ளி பாடசாலையில் கடந்த புதன்கிழமை நடைபெற்றது. (ம-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





கிளிநொச்சி, பளை இந்து ஆரம்பப் பாடசாலையின் 2020 ஆம் ஆண்டு தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு பாடசாலை மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது. பிரதம விருந்தினராக கிளிநொச்சி வடக்கு வலயக் கல்விப் பணிப்பாளர் நா.கந்ததாசன் கலந்துகொண்டார். நிகழ்வில் பச்சிலைப்பள்ளி அபிவிருத்திப் பேரவையினரின் நிதிப்பங்களிப்பில் பாடசாலையின் நான்காவது திறன்வகுப்பறை திறந்துவைக்கப்பட்டது. (ச-159)




தென்மராட்சி பிரதேச செயலக கலாசாரப் பிரிவால் பாடசாலை மாணவர்களுக்கிடையில் நடத்தப்பட்ட தேசிய கலை இலக்கியப் போட்டிகளின் முடிவுகள் வெளியாகியுள்ளன. நடைபெற்ற போட்டிகளில், சாவகச்சேரி கல்வயல் ஸ்ரீ சண்முகானந்தா வித்தியாலய மாணவர்கள், கையெழுத்துப்போட்டியில் பாலர், சிறுவர் ஆகிய இரு பிரிவுகளில் முதல் மூன்று இடங்களையும் சிறுவர் பிரிவுக்கான கவிதைப்போட்டியில் 2,3 ஆம் இடங்களையும் பெற்றுள்ளனர். வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசில்களை, தென்மராட்சி பிரதேச உதவிப் பிரதேச செயலர் தமிழினி சதீஸ் பாடசாலைக்குச் சென்று வழங்கினார். (ரி1-9)



பண்டத்தரிப்பு பிரான்பற்று கலைமகள் வித்தியாலயத்தில் கற்கும் 60 மாணவர்களுக்கு செரண்டிப் சிறுவர் இல்லத்தால் காலணிகள் வழங்கிவைக்கப்பட்டன. (ஒ-ரி1-9)



மிருசுவில் றோ.க.த.க. பாடசாலையில் சேவையாற்றி இடமாற்றம் பெற்றுச்சென்ற பிரதி அதிபர் மற்றும் ஆசிரியர்கள் ஆகியோரைக் கௌரவிக்கும் நிகழ்வு பாடசாலை அதிபர் தலைமையில் இடம்பெற்றது. நிகழ்வில் பிரதி அதிபர் அருட்சகோதரி ஞானப்பிரகாசம் இமெல்டா சுபாஜினி, திருமதி தர்சா குகதாசன் மற்றும் திருமதி மிதுனா செந்தில்நாதன் ஆகியோருக்கு பரிசுப் பொருள்கள் மற்றும் நினைவுச்சின்னங்கள் என்பவை வழங்கப்பட்டுக் கௌரவிக்கப்பட்டனர். (ச-159)



மிருசுவில் விடத்தற்பளை கமலாசனி வித்தியாலயத்தின் திறன் வகுப்பறைக்கு சுமார் இரண்டு லட்சம் ரூபா பெறுமதியான தளபாடங்கள் சாவகச்சேரி இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்க நோர்வே கிளையினரால் கடந்த செவ்வாய்க்கிழமை வித்தியாலய அதிபரிடம் கையளிக்கப்பட்டன. (ய-9)

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் கற்சிலைமடு கிராமத்தின் ஐம்பது மாணவர்களுக்கான கல்வி சார் உபகரணங்கள் தமிழ்தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் அண்மையில் வழங்கிவைக்கப்பட்டன.

தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் முல்லைமாவட்ட அமைப்பாளரும் புதுக்குடியிருப்புப்பிரதேசசபை உறுப்பினருமான க.விஜயகுமார் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராஜா கஜேந்திரன், கற்சிலைமடுச்செயற்பாட்டாளர் மாலன், முன்னணியின் மாங்குளம் பிரதேசப்பொறுப்பாளர் பிறேம் ஆகியோர் கலந்து கொண்டு மாணவர்களுக்கான கல்விசார் உபகரணங்களை வழங்கினர். (ய-19)





யாழ்ப்பாணம் மானிப்பாய் பெரியதம்பிரான் ஆலய சைவபரிபாலன அறநெறி மன்றத்தால் நடத்தப்பட்ட பரிசளிப்பு விழா அண்மையில் இடம்பெற்றது. விழாவில் உயர்தர பரீட்சை, சாதரணதர பரீட்சை ஆகியவற்றில் உயர் பெறுபேறுபெற்ற மாணவர்கள் மற்றும் மன்றத்தால் நடத்தப்பட்ட பொதுஅறிவுப் போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்கள் ஆகியோருக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன. (ம)



தென்மராட்சி பிரதேசசெயலகத்தின் ஒளிவிழா பிரதேச செயலர் திருமதி உஷா சுபலிங்கம் தலைமையில் பிரதேச செயலக மண்டபத்தில் இடம்பெற்றது. (ச-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசுக்கு எதிராக போராடினால் சிறை!

## அரச அலுவலர்களுக்கு திஸாநாயக்க எம்.பி. எச்சரிக்கை

**கொழும்பு, டிசெ. 25**

**அரச ஊழியர்கள் அரசுக்கு எதிராகப் போராட்டம் செய்தால் சிறைச்சாலை செல்லவேண்டி வரும் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். பி.திஸாநாயக்க தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாடு தற்போதுள்ள நிலையில் அரச ஊழியர்களுக்கும் சம்பளம் குறைக்கலாமே தவிர அதிகரிக்க முடியாது.

உரப் பிரச்சினையைப் பார்த்தால் யூரியாவைக் கொடுக்கலாம் என்ற நிலைப்பாடு உள்ளது. ஆனாலும், இயற்கைப் பசளையே சிறந்தது.

இப்போது பேசப்படும் விடயம் டொலர் பற்றாக்குறை. இந்தப் பிரச்சினைக்கு அடுத்த வருடம் தீர்வு கிடைக்கும்.

நாட்டில் வேலை செய்கின்ற அனைத்து ஊழியர்களுக்கும் இப்போது சம்பளம் குறைக்க வேண்டுமே தவிர அதிகரிப்பு இல்லை. அதற்காகப் போராட்டம் செய்வது தண்டனைக்குரிய குற்றமாகும்.

நமது நாட்டுக்கு இப்போது முக்கியமாகத் தேவைப்படுவது வெளிநாட்டு பங்களிப்பு. எரிவாயு வெடிப்பு பிரச்சினைக்கு ஜனவரியில் தீர்வு கிடைக்கும்" -என்றார். (த-22)

## மக்களின் இக்கட்டான நிலையை டக்ளஸ் தனக்கு சாதகமாக்குகிறார்

### கஜேந்திரன் எம்.பி. குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், டிசெ. 25

அழிவு வேலைகளுக்கு துணைபோன கடற்றொழில் அமைச்சர், மக்களின் இக்கட்டு நிலையை சாதகமாகப் பயன்படுத்தி, தானே வந்து பிரச்சினையைத் தீர்ப்பது போல சித்தரிப்பதை ஏற்க முடியாது என்று, அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று நடந்த கடற்றொழிலாளர்களின் போராட்டத்தில் கலந்துகொண்ட அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இடை நடுவில் வெளியேறியிருந்தனர்.

அது தொடர்பில் கேட்டபோது அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்திய மீனவர்களாலும் தென்னிலங்கை மீனவர்களாலும் எமது பகுதி மீனவர்களின் வாழ்வாதாரம் திட்டமிட்டு அழிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. நாம் மீனவர்களுக்காக தொடர்ச்சியாக குரல் கொடுத்து வருகின்றோம்.

ஆனால், அந்தப் போராட்டத்துக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வந்த பொழுது நான் அங்கு இருக்க விரும்பவில்லை.

தமிழக மீனவர்கள் இங்கு மீன்களைப் பிடிப்பதற்காக வரக்கூடும். ஆனால், இலங்கைக் கடற்படையினரோ அந்த மீனவர்களை திட்டமிட்டு வடபகுதியில் மீன்களை பிடிக்க விடுகின்றார்கள்.

இதற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் துணை போகின்றார். இரண்டு வருடங்களாக அவர் அமைச்சராக இருந்தும் மீனவர்களின் பிரச்சினையைத் தீர்க்க முடியாமல் இருக்கின்றார். அவர் மானமுள்ள தமிழனாக இருந்திருந்தால் இந்த அரசாங்கத்தை விட்டு வெளியேறி இருக்க வேண்டும். டக்ளஸ் தேவானந்தாவின் வேலை முழு ஏமாற்றுத்தனமான செயற்பாடு - என்றார். (த-20- 26)

# ராஜபக்ச அரசாங்கம் பதவி விலகவேண்டும்




யாழ்ப்பாணம், டிசெ. 25

தற்போதைய நெருக்கடி நிலையை, சிறப்பாக நடத்த முடியாவிட்டால் அரசாங்கம் பதவிவிலக வேண்டும் என்று, அகில இலங்கை மக்கள் எழுச்சிக் கட்சியின் தலைவர் அருள். ஜெயேந்திரன் தெரிவித்தார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஒவ்வொரு பொருளின் விலையும் அதிகரிக்கிறது. இலங்கையில் 90 வீதமான மக்கள் வறுமையில் இருக்கும்போது 10 வீதமானவர்களிடமே பணம் குவிந்து காணப்படுகிறது.

சிங்கள மக்கள்கூட தற்போது பெரிய துன்பத்தை அனுபவித்து வருகின்றனர். அரசாங்கத்தை சிறப்பாக நடத்த முடியாவிட்டால் ஆட்சியாளர்கள் பதவிவிலக வேண்டும்.

இந்திய மீனவர்கள் நமது மீனவர்களின் வாழ்வாதாரத்தை அழிப்பதை ஏற்க முடியாது. இலங்கை கடற்படை கைப்பற்றிய படகுகளை இலங்கையில் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு பங்கிட்டுக் கொடுப்பதையே நமது கட்சி விரும்புகின்றது- என்றார். (த-20)

மேன்முறையீட்டு

## நீதிமன்ற நீதிபதியாக

### விக்கும் அத்துல களுஆராச்சி

கொழும்பு, டிசெ. 25

மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதியாக விக்கும் அத்துல களுஆராச்சி நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் முன்னிலையில் அவர் நேற்றுமுற்பகல் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார் என்று, ஜனாதிபதி ஊடகப்பிரிவு குறிப்பிட்டது. மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி தேவிகா அபேரத்ன ஓய்வு பெறுகின்றார். அதனால் ஏற்பட்டுள்ள வெற்றிடத்துக்கே விக்கும் அத்துல களுஆராச்சி நியமிக்கப்பட்டுள்ளார்.

விக்கும் அத்துல களுஆராச்சியின் 33 வருட சேவைக் காலத்தில், 27 வருடங்கள் நீதிவானாகவும் மாவட்ட நீதிபதியாகவும் குற்றவியல் நீதிமன்றம், சிவில் மேன்முறையீட்டு மேல் நீதிமன்றம் ஆகியவற்றின் நீதிபதியாகவும் கடமையாற்றியுள்ளார். இவர் மேல் நீதிமன்றத்தின் முன்னாள் சிரேஷ்ட நீதிபதியுமாவார். (த-இ)

**பணிப்பெண்தேவை**

சிறிய குடும்பம் ஒன்றிற்கு வீட்டில் தங்கியிருந்து பணிபுரிவதற்கு பணிப்பெண் ஒருவர் தேவை

தொடர்பு: 077 26 26 944

**பணிப்பெண்தேவை**

பிறந்த குழந்தை ஒன்றை பராமரிப்பதற்கு வீட்டில் தங்கியிருந்து பணிபுரிவதற்கு பணிப்பெண் தேவை.

தொடர்பு: 077 32 76 502

**காணி,வீடு விற்பனைக்கு**

கோண்டாவில், கொக்குவில் பகுதியில் 2 வீடுகள் (1 1/2 பரப்பில்) காணி (4 பரப்பு ,2 பரப்பு) விற்பனைக்குண்டு .

தொடர்பு -
0707037058/ 0776011135

**காரைநகர் கிழவன்காடு கலாமன்றம் நடாத்தும்**
**பரிசளிப்பும் கலைநிகழ்வும் அழைப்பு**

**இடம்:-** கிழவன்காடு கலாமன்ற மனோன்மணி கலையரங்கு . காரைநகர்.
**காலம் :-** 26.12.2021 ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2.00 மணி

தலைவர்
**திரு. ந. சோதிநாதன் அவர்கள்**
(ஸ்தாபகரும் தலைவரும் கிழவன்காடு கலாமன்றம். காரைநகர்)
பிரதம விருந்தினர்
**திரு. திருமதி சிவதாஸ் சுஜிபா தம்பதியினர்**
(பிரதிப் பணிப்பாளர். பண்பாட்டலுவல்கள் திணைக்களம். வடகமாகாணம்.
சிறப்பு விருந்தினர்
**திரு. இ. சர்வேஸ்வரா அவர்கள்**
(விரிவுரையாளர் கல்வியற்துறை யாழ் பல்கலை)
துறைசார் விருந்தினர்கள்
**கலாநிதி ஸ்ரீமதி த. ஆனந்தஜோதி அவர்கள்**
(தலைவர் . நடனத்துறை யாழ் பல்கலைக்கழகம்)
**நாதஸ்வர கலாஜோதி K.K. நாகதீபன் அவர்கள்**
(நாதஸ்வர வித்துவான்)
கௌரவ விருந்தினர்கள்
கலைமாடக்கோன்
**திரு. திருமதி. சிவஞானம் உமாதேவி தம்பதியினர்**
(கௌரவ உறுப்பினர். கிழவன்காடு கலைமன்றம் காரைநகர் )
கல்விக்காருண்யன்
**திரு. திருமதி E.S.P நாகரத்தினம் தங்கமலர் தம்பதியினர்**
(தொழிலதிபர். E.S.P நிறுவனம்)

நாட்டியாஞ்சலி
நெறியாள்கை:-
நுண்கலைமாணி ஸ்ரீமதி ஸ்ரீதேவி கண்ணதாசன்
பட்டிமண்டபம்
தலைப்பு
**தற்கால சீரழிவுக்கு காரணம்**
**பண்பாடு சிதைந்தமையே !**
திரு. ந. ஜங்கரன்
செல்வி மொ.டிலோஜினி
காரை. க. விநோதன்
**நவீனம் வளர்ந்தமையே !**
திரு. T. ஹர்ஷன்
செல்வி.சி. அபிஷாயினி
திரு. த. கருணாகரன்
நடுவர்
**சிதம்பரஜோதி . தமிழுருவி**
த. சிவகுமாரன்
நன்றியுரை
குறிப்பு :- நிகழ்விற்கான இலவச போக்குவரத்து சேவைகள் யாழ் கிளையிலிருந்து (428 K.K.S வீதி பி.ப. 1.30 மணிக்கு ஆரம்பமாகும். நிகழ்வு சுகாதார நடைமுறைகளுக்கு அமைவாக நடைபெறும்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
**கிழவன் காடு கலாமன்றம் காரைநகர்**

## மரண அறிவித்தல்



## இரத்தினம் பத்மதேவன் (மகா)

இருபாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டஇரத்தினம் பத்மதேவன் அவர்கள் கடந்த (21.12.2021) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி இரத்தினம் தங்கேஸ்வரி என்பவரின் மூத்த மகனும், காலஞ்சென்ற நடராஜா இரத்தினம்மா (கோண்டாவில்) என்பவரின் அன்பு மருமகனும், யோகம்மாவின் அன்புக் கணவரும், தனீஸ்வரன், சசிகரன், தயாபரன், ஆகியோரின் அன்பு தந்தையும், கஜனி, அனோஜா, நிரோஜினி ஆகியோரின் அன்பு மாமனாரும், ஹரிஷாந், ஹம்ஷரன், சபின், ஆருஷி, கர்னிஸ் ஆகியோரின் அன்புப் பேரனும், மகேந்திரன், உதயகுமார், சாந்தகுமாரி, காலஞ்சென்ற விஜயகுமார், சிவகுமார், அருந்ததி, கற்பகநாதன், சசிகுமார், மகேஸ்வரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.12.2021) ஞாயிற்றுக் கிழமை காலை 7.00 மணியளவில் நடைபெற்று முற்பகல் 10.00 மணியளவில் பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக இருபாலை செக்கடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலை ஆள்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கி வரும் பேக்கரி ஒன்றிற்கு பணி புரிய ஓரளவு அனுபவமிக்க பாண் உற்பத்தியாளர்களைத் தேடுகின்றோம். தகுதிக்கேற்ற சம்பளம் வழங்கப்படும்.

(CS 41824)(3.6) 077 785 8317



## வாடகைக்கு

யாழ். ஆஸ்பத்திரி வீதியில் இராசாவின் தோட்ட வீதி சந்தியிலுள்ள கடை சகல தளபாடங்களுடன் இயங்கு நிலையில் வாடகைக்கு உண்டு

தொடர்பு: 076 7049048
(whatsapp) +440 777 665 5080


# யாழ்ப்பாணத்திலும் தீப்பந்தப் போராட்டம்

யாழ்ப்பாணம், டிசெ. 25

நாட்டில் அதிகரித்துள்ள பொருள்களின் விலையேற்றத்தை கண்டித்து, மல்லாகம் பழம்பிள்ளையார் கோவிலில் ஆரம்பித்த தீப்பந்தப் போராட்டம் காங்கேசன்துறை வீதியி ஊடாகச்சென்று சுன்னாகம் சந்தியில் நிறைவடைந்தது.

ஐக்கிய மக்கள் சக்தியின் காங்கேசன்துறை தொகுதி அமைப்பாளர் வன்னியசிங்கம் பிரபாகரனின் ஏற்பாட்டில் நடைபெற்ற குறித்த தீப் பந்தப் போராட்டத்தில் விவசாயிகளும் பொதுமக்களும் கலந்துகொண்டு தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

வவுனியாவிலும் தீப்பந்தப் போராட்டம் நேற்று நடைபெற்றது.

(த-125)

கைவிடப்பட்டது...

நாள்களாக மேற்கொண்டுவந்த, வேலைநிறுத்தப் போராட்டம் தற்காலிகமாக இடைநிறுத்தப்படுவதாக அந்தச் சங்கம் அறிவித்துள்ளது.

சுகாதார அமைச்சினால் எமது கோரிக்கைகளுக்காக வெளியிடப்பட்டுள்ள பதில் கடிதமானது முழுமையாக ஏற்றுக்கொள்ளப்படாததுடன், தேவையான திருத்தங்களை மேற்கொள்வதற்கும், வருகின்ற கிறிஸ்மஸ், புதுவருட உற்சவ காலத்தையும் கருத்திற்கொண்டே போராட்டம் ஒத்திவைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது என்று, சங்கம் மேலும் குறிப்பிட்டுள்ளது. (த-இ)


# மீள்கேள்வி அறிவித்தல் - 2022
## மன்னார் நகரசபை

மன்னார் நகரசபைக்குச் சொந்தமான கீழ்காணும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள நிலையங்களை குத்தகைக்கு விடுவதற்கான கேள்விகள் கோரப்பட்டுள்ளன.

**குத்தகைக் காலம் - குத்தகைக் காலம் - 01.01.2022 - 31.12.2022**

| இல | குத்தகையின் பெயர் | மீளளிக்கக் கூடிய கேள்வி வைப்பு | மீளளிக்கப்படாத பத்திரக் கட்டணம் | சபையின் குறைந்த கேள்வித் தொகை |
|---|---|---|---|---|
| 1 | பெரியகமம் மாட்டிறைச்சிக்கடை | 20,000.00 | 2,000.00 | 1,361,250.00 |
| 2 | பட்டின ஆட்டிறைச்சிக்கடை | 10,000.00 | 2,000.00 | 166,950.00 |
| 3 | பட்டின மீன்சந்தை | 20,000.00 | 2,000.00 | 1,253,934.00 |
| 4 | கீரி கடற்கரை பொழுதுபோக்கு மையம் | 10,000.00 | 1,000.00 | 72,121.50 |
| 5 | பட்டின சிறுவர் பூங்கா சிற்றுண்டிச்சாலை | 10,000.00 | 1,000.00 | 30,145.50 |
| 6 | வாகனத்தரிப்பிடக்கட்டண அறவீடு | 10,000.00 | 2,000.00 | 483,999.12 |
| 7 | மீன்சந்தைக்கு அருகாமையில் உள்ள குளியலறையுடன் சேர்ந்த கழிப்பறை | 10,000.00 | 1,000.00 | 90,000.00 |

**பொது விளையாட்டு மைதான சிற்றுண்டிச்சாலை : குத்தகைக் காலம் 01.01.2022 - 31.12.2022**

| கடை இல | மீளளிக்கப்படாத பத்திரக் கட்டணம் | மீளளிக்கக் கூடிய கேள்வி வைப்பு | சபையின் குறைந்த கேள்வித் தொகை |
|---|---|---|---|
| 01 | 2,000.00 | 20,000.00 | 399,600.00 |

**பஸ் நிலையத்திற்கு அருகாமையில் அமையப்பெற்ற கடை - இல 50 -B**

| கடை இல | அளவுப் பிரமாணம் | மீளளிக்கப்படாத பத்திரக் கட்டணம் | மீளளிக்கக் கூடிய கேள்வி வைப்பு | சபையின் குறைந்த கேள்வித் தொகை | மாதாந்த வாடகை |
|---|---|---|---|---|---|
| 50 -B | 5'-0" X 15'-0" | 2,000.00 | 20,000.00 | 900,000.00 | 5,000.00 |

கேள்விப் பத்திரம் வழங்கும் திகதி :- 25.12.2021 – 31.12.2021 வெள்ளிக்கிழமை பி.ப 11.00 மணிவரை
கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி :- 31.12.2021 வெள்ளிக்கிழமை பி.ப 11.30 மணிவரை
கேள்விகள் திறக்கப்படும் திகதி :- 31.12.2021 வெள்ளிக்கிழமை பி.ப 11.30 மணி

01. கேள்விப்பத்திரங்கள் இரண்டு பிரதிகளில் தனித்தனியான உறைகளில் இடப்பட்டு அரக்கு முத்திரை இடப்பட்டு "தலைவர், மன்னார் நகரசபை" என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் குறித்த தினத்திற்கு முன் எமக்கு கிடைக்கக் கூடியவாறு அனுப்பிவைக்கப்படல் வேண்டும் அல்லது சபையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் இடப்படல் வேண்டும். கேள்விப்படிவங்கள் அடங்கிய கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்விகோரும் சேவையின் விபரம் குறிப்பிடப்படல் வேண்டும்.
02. கேள்விப்பத்திரங்கள் மீளளிக்கப்படாத படிவக்கட்டணமும், மீளளிக்கப்படக்கூடிய வைப்புப்பணமும் செலுத்தி நகரசபையில் பெற்றுக் கொள்ளலாம். மேலும் மன்னாரில் நிரந்தரமாக வசிப்பவர்களுக்கு மட்டுமே கேள்விப் படிவம் வழங்கப்படும். (இதனை கிராம அலுவலரின் சிபாரிசுடனும் பிரதேசசெயலாளரின் அத்தாட்சிப்பத்திரத்துடனும் சமர்ப்பித்தல் வேண்டும்). இந் நிபந்தனை 2021 ல் குத்தகை எடுத்து நடாத்தியவர்களுக்குப் பொருந்தாது. அத்துடன் தே.அ.அ. நிழற் பிரதியும் சமர்ப்பித்தல் வேண்டும்.
03. கேள்விப் படிவம் எடுத்து உரிய நேரத்தில் சமர்ப்பிக்காதவர்களுக்கு கேள்வி வைப்புப் பணம் எக்காரணம் கொண்டும் மீளளிக்கப்படமாட்டாது. **கடந்த காலக் கேள்விகள் மூலம் சபைக்கு வருமதியான நிலுவைகளைச் செலுத்தத் தவறியவர்களும், கறுப்புப் பட்டியலில் உள்ளவர்களும் குத்தகைக் கேள்விகளில் பங்குபற்றத் தகுதியற்றவராவார்கள்.**
04. 31.12.2021 ம் திகதி பிற்பகல் 11.30 மணிக்குப் பின்னர் கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படும். மேலும் கேள்விகளை ஏற்கும் அல்லது நிராகரிக்கும் உரிமை கேள்விச் சபைக்குரியதாகும்
05. வெளியிடங்களிலிருந்து சட்ட ஏற்பாடுகளுக்கமைய மாடு மற்றும் ஆடு கொண்டு வருவது குத்தகையாளரது பொறுப்பே ஆகும் இதற்கு சபை எவ்விதத்திலும் பொறுப்பேற்காது.
06. இறைச்சி விற்பனையின் போது தனி இறைச்சி 1Kg 900.00 ரூபா, முள்ளுடன் இறைச்சி 1Kg 800.00 ரூபா, ஈரல் 1Kg 1,300.00 ரூபா, ஆட்டிறைச்சி 1Kg 2,200.00 ரூபா என்ற விலைகளிலேயே விற்கப்படல் வேண்டும். (காலத்திற்கு காலம் இறைச்சியின் விலைகளில் ஏற்படும் மாற்றம் கருத்தில் கொள்ளப்படும்).
07. மாடு மற்றும் ஆடு அறுவைக்காக கொல்கள நிலையத்தில் தரித்து வைக்கப்படுவது தொடர்பிலான பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு என்பனவற்றினை குத்தகைக்கு பெற்றவர்களே மேற்கொள்ள வேண்டும் என்பதுடன் சபை எந்த விதத்திலும் பொறுப்பேற்காது.
08. குளியலறையில் குளிப்பதற்கு பெரியவர்களுக்கு ரூபா 50.00 ம், சிறுவர்களுக்குரூபா 30.00 ம், மலகூடப் பாவனைக்கு ரூபா 20.00 ம், சிறுநீர் கழிப்பதற்கு ரூபா 10.00 ம் என்ற கட்டணங்களே அறவிடப்படல் வேண்டும்.
09. வாகன தரிப்பிட அறவீடுகள் என்பது தனியார் வாடகை வாகனங்கள், முச்சக்கர வண்டிகள், இருசில்லு உழவு இயந்திரங்கள், மற்றும் நகரத்தின் உள்நுழையும் தனியார் வாகனங்கள் ஆகியவற்றிற்கான தரிப்பிடக்கட்டண அற வீடுகளுக்கானதாகும்.
10. தனியார் வாடகை வாகனம் ஒன்றிற்கு ரூபா 30.00ம், முச்சக்கர வண்டி ஒன்றிற்கு ரூபா 20.00ம், இருசில்லு உழவு இயந்திரத்திற்கு ரூபா 20.00ம், ஏனைய உள்நுழையும் தனியார் வாகனங்களுக்கு ரூபா 50.00ம் என்ற அடிப்படையிலேயே கட்டணங்கள் அறவிடப்படல் வேண்டும்.
11. கீரி கடற்கரை பொழுதுபோக்கு மையத்தில் அமைந்துள்ள குளியலறையில் குளிப்பதற்கு பெரியவர்களிற்கு ரூபா 50.00ம், சிறியவர்களிற்கு ரூபா 30.00ம், மலகூடப் பாவனைக்கு ரூபா 20.00ம், சிறுநீர் கழிப்பதற்கு ரூபா 10.00ம் என்ற கட்டணங்களே அறவிடப்படல் வேண்டும்.
12. கீரி கடற்கரை பொழுதுபோக்கு மையப்பகுதியில் மதுபானம் அருந்துதல், புகைத்தல் கலாச்சாரத்திற்கு முரண்பாடான செயற்பாடுகள் முற்றாக தடைசெய்யப்பட்டுள்ளது.
13. கீரி கடற்கரை பொழுதுபோக்கு மையத்தில் அமைந்துள்ள சிற்றுண்டிச்சாலையில் அரசாங்கத்தால் தடைசெய்யப்பட்ட பொருட்களை விற்பனை செய்தல் முற்றாகத்தடை செய்யப்பட்டுள்ளது.
14. பட்டின சிறுவர் பூங்கா சிற்றுண்டிச்சாலையில் அரசாங்கத்தால் தடைசெய்யப்பட்ட பொருட்களை விற்பனை செய்தல் முற்றாகத்தடை செய்யப்பட்டுள்ளது.
15. நகரசபையின் குத்தகை ஒப்பந்தத்தின் கீழ் கடைகளினை பெறுவோர் எவ்விதத்திலும் கடையினை மூன்றாம் நபருக்கு கைமாற்றம் செய்ய முடியாது. மேலும் அவ்வாறு கைமாற்றம் செய்தால் தங்களுக்கு வழங்கப்பட்ட கடை எவ்வித முன்னறிவித்தலுமின்றி நகரசபையினால் கடைகள் உடன் கையேற்கப்படும் என்பதுடன் செலுத்தப்பட்ட கேள்வித் தொகை மீள வழங்கப்படமாட்டாது.
16. நகரசபையினால் வழங்கப்படும் கடைகளின் அளவுப் பிரமாணங்களில் மாற்றம் செய்வது முழுமையாக தடை செய்யப்பட்டுள்ளது.
17. மாதாந்த வாடகைத் தொகையானது காலத்திற்கு காலம் மாற்றப்படும் போது குறித்த வாடகையினை செலுத்த இணங்குதல் வேண்டும்.

- சித்தியடையும் கேள்விதாரர் 31.12.2021 ம் திகதி பி.ப 4.00 மணிக்கு முன் 1/3 பகுதி வைப்புத்தொகை / கேள்வித்தொகையினை செலுத்தி குறித்த சேவையின் பேரில் சபையுடனான ஒப்பந்தத்தினை செய்து கொள்ளுதல் வேண்டும் என்பதுடன் மேலதிக கால அவகாசம் வழங்கப்படமாட்டாது.
- இக்கேள்விகள் சம்பந்தமாக மேலதிக விபரங்கள் தேவையாயின் மன்னார் நகரசபை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

G.அன்ரனி டேவிட்சன்
தலைவர்
மன்னார் நகரசபை.
25.12.2021

(cr.36788) (2.6)



## மாபிள் வேலை

உங்கள் வீடுகளிற்கு தரமான முறையில் அழகாக மாபிள் பதித்து தரப்படும். ஒரு சதுர அடி - 45 ரூபாய்

077 334 1281



St John Sri Lanka

## அம்புலன்ஸ் சாரதிக்கான ஆட்சேர்ப்பு

சென்.ஜோன் அம்புலன்ஸ் யாழ். மாவட்ட அம்புலன்ஸ் சேவையின் சாரதி வெற்றிடத்தை பூர்த்தி செய்வதற்கு விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது. இதற்கான நேர்முகப் பரீட்சை 01.01.2022 அன்று மாலை 4.00 மணிக்கு சென்.ஜோன் அம்புலன்ஸ், யாழ். மாவட்ட தலைமைக் காரியாலயம், 1 ஆம், குறுக்குத்தெரு இல.161, யாழ்ப்பாணத்தில் நடைபெறும் கொடுப்பனவு கள் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

மேலதிக விபரத்திற்கு
அவரச அம்புலன்ஸ் சேவை
இலக்கம்: 071 019 9199, 021 321 4444

செ. செல்வறஞ்ஜன் O.St.J
மாவட்ட ஆணையாளர்,
சென்.ஜோன் அம்புலன்ஸ் யாழ். மாவட்டம்.

(CS 1229) (2.6)



## 1 ஆவது பிறந்த நாள் வாழ்த்து
## 25.12.2021

டச்சுவீதி, இருபாலை கோப்பாய் தெற்கைச் சேர்ந்த
திரு.திருமதி கோபாலரத்னாசாம்பவி தம்பதிகளின்
செல்வப்புதல்வன்

HAPPY BIRTHDAY **சிவஹரகன்** HAPPY BIRTHDAY

இன்று (25.12.2021) முதலாவது பிறந்ததினத்தை தனது இல்லத்தில் சிறப்பாகக் கொண்டாடுகின்றார் இவரை தென்கோவைக் கற்பகப்பிள்ளையார், வேலணை மேற்கு முடிப்பிள்ளையார், நல்லூர்க் கந்தன் பேரருள் பெற்று அப்பப்பா, அப்பம்மா, வேலணை பாலாத்தாத்தா, அம்மம்மா, அப்பா, அம்மா, தயான்மாமா, அத்தை மற்றும் லண்டன் கௌரிமாமா, செந்தூர்மாமா இவர்களுடன் இடைக்காடு பெரியப்பா, பெரியம்மா, அண்ணாமார், அக்காமார் ஆகியோர் பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

இருபாலை

(cs.41788) (2.6)





திரு. ஜெகதீசசிங்கம் சத்தியேந்திரன் - JP
ஒய்வு நிலை உதவிப் பிராந்திய முகாமையாளர் தென்னைப் பயிர்ச்செய்கைச் சபை. யாழ்ப்பாணம்.
Congratulations
அவர்களின்

**மணிவிழாவும், "தென்னைகளுக்கிடையில் ஊடுபயிராக கமுகு (பாக்கு) செய்கை எனும் நூல் வெளியீட்டு விழாவும்**

இடம்: திவ்ய ஜீவன சங்க மண்டபம் (சட்டநாதர் சிவன் கோயில் அருகாமை) பருத்தித்துறை வீதி, கல்வியங்காடு, நல்லூர்.
கலாம்: 26.12.2021 நேரம்: காலை 9.30 மணி
தமிழில் முதல் வெளிவருகின்ற நூல் ஒன்றின் விலை 600/=

குறிப்பு: எதிர்காலத்தில் தென்னை அபிவிருத்தி சம்பந்தமாக தென்னைந் தோட்டங்களைப் பார்வையிட்டு இலவச ஆலோசனைகளை பெற விரும்புவோர் 077 505 6263 எனும் Mobil உடன் தொடர்புகொள்ளவும்.

- விழா ஏற்பாட்டுக் குழு -

(cs.41823) (2.6)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் காணிக்கை

மலர்வு 01 . 08 . 1930 | உதிர்வு 21 . 12 . 2021



## அமரர் சின்னத்தம்பி தியாகராஜா (S.T.R)

### (S.T.R Films உரிமையாளர்)

நெஞ்ச மதில் நிலைத்து நின்று
எண்ணமதில் என்றும் நிலைத்து
வண்ணமலர் வாசமாக மனதில் நின்றீர்,
கண்ணிமைக்கும் நேரத்தில்
காலனுமைக் கவர்ந்து சென்றதேனோ?
கொடுமையை எண்ணிக் கலங்குகின்றோம்
மனம் வெதும்பி வாடுகின்றோம்

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

பிரிவால் துயருறும்
**S.T.R Films நிர்வாகத்தினரும்,**
**ஊழியர்களும்.**

(CS 41840) (/6)

# 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 08 . 10 . 1951 | விண்ணில் 25 . 12 . 2016




## அமரர் வல்லி சிதம்பரநாதன்

நாள்கள் பல கடந்தும் வருடங்கள் ஆனாலும்
அகலுமா உங்கள் பிரிவின் சோகம்
ஆறவில்லை எம் இதயம் எம் உயிர் உள்ளவரை
உங்கள் நினைவுகள் என்றும் எம் நினைவில்...
உங்கள் ஆத்மா சாந்திபெற வேண்டுகின்றோம்.

**27/15, றக்கா வீதி,**
**கச்சேரி யாழ்ப்பாணம்.**

**சிதம்பரநாதன்**
**குடும்பத்தினர்.**

# தசாஹ கிருஹயக்ஞ அழைப்பு



நிகழும் பிலவ வருடம் மார்கழி மாதம் 01 ஆம் நாள் (16.12.2021) வியாழக்கிழமை
அமரத்துவம் அடைந்த கௌண்டுன்ய கோத்திரம்

## அமரர்
## பிரம்மஸ்ரீ இரத்தினசபாபதிக்குருக்கள்
## சந்தானகோபாலசர்மா

அவர்களின் ஆத்ம சாந்தி கிரியைகள் பின்வரும் தினங்களில் நடைபெறும்

- 25.12.2021 சனிக்கிழமை - தசாகம் பகல் 10.00 மணி
- 26.12.2021 ஞாயிற்றுக்கிழமை - ஏகோதிஷ்ட. மாசியம்
- 27.12.2021 திங்கட்கிழமை - சபிண்டீகரணம்
- 28.12.2021 செவ்வாய்க்கிழமை- கிருஹயக்ஞம் (மதியபோசனம்)

மேற்படி கிரியைகளில் பங்குபற்றி அன்னாரது ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கு மாறும், செவ்வாய்க்கிழமை நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறும் அன்புடன் அழைக்கின்றோம்.

**இல.7, ஓடைலேன்,**
**வண்ணார்பண்ணை,**
**யாழ்ப்பாணம்.**

**பெறாமகள் - ஜெய[illegible]**
**021 222 7660**

(cs.41833) (2.6)

# யாழ்ப்பாணம் மாநகர சபை,
# 2022ஆம் ஆண்டுக்கு ஏற்புடையவாறு வீதவரி விதித்தல்

யாழ்ப்பாணம் மாநகர சபையின் தத்துவங்களை அமுல்படுத்துவதுடன், பணிகள், செயற்பணிகளை நிறைவேற்றுகின்ற யாழ்ப்பாணம் மாநகர சபையின் கௌரவ முதல்வர் விஸ்வலிங்கம் மணிவண்ணன் ஆகிய நான் யாழ்ப்பாணம் மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 286அ பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய மேற்படி சட்டத்தின் 230(1) பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைய யாழ்ப்பாணம் மாநகர சபை அதிகாரப் பிரதேசத்திற்கு 2022 ஆம் ஆண்டிற்கு ஏற் புடையதாக வீதவரி விதிப்ப தானது பின்வருமாறு இருத்தல் வேண்டும் என்று தீர்மானிக்கின்றேன். அதாவது.

மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 238 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் கீழ் யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக் கொண்டு மாநகர சபைகள் அதிகாரப் பிரதேசத் திற்குள் அமைந்துள்ள சகல வீடுகள், கட்டடங்கள், காணிகள் மற்றும் நிர்மாணிப்பு களின் வருடாந்த பெறுமதிக்கு 2021 ஆம் ஆண்டுக்கான விலைமதிப்பு மதிப்பீட்டை 2022 ஆம் ஆண்டிற்கான விலைமதிப்பு மதிப்பீடாக நிறைவேற்றிக் கொள்ள வேண்டும் என்றும், மேற்படி விலை மதிப்பின் அடிப்படையில் மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 286அ ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அக் கட்டளைச் சட்டத்தின் 230(1) பிரிவிலுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய எனக்கு உரித்தாக் கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக் கொண்டு மேற்படி ஆதனத்தின் மீது குறித்த மதிப் பீட்டுக்கு வருடாந்தப் பெறுமதியில் எட்டு சதவீதமான (8%) வருடாந்த வீத வரி வெற்றுக் காணிகள் மற்றும் வதிவிடங்களுக்கும், 10 சத வீதமான (10%) வருடாந்த வீத வரியை சகல ஏனைய இடங்களுக்கும் விதிக்கப்படல் வேண்டும் என்றும்.

மேலும், 2022 ஆம் ஆண்டில் பின்வரும் அட்டவணையில் வெளிப்படுத்தப்பட்டுள்ள ஒவ் வொரு காலாண்டிற்கும் எதிரே குறிப்பிடப்பட்டுள்ள திகதிக்கு முன்னர் அவ்வாறு விதிக்கப்படு கின்ற வருடாந்த வீதவரியை யாழ்ப்பாண மாநகரசபையின் நிதியத்திற்குச் செலுத்த வேண்டும் என்றும், அவ்வாறு வருடாந்த வீதவரி 2022 ஆம் ஆண்டு சனவரி மாதம் 31 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் முழுமையாக செலுத்தப் படுமாயின், வருடாந்த வீதவரித் தொகையில் நூற்றுக்கு பத்து சதவீதமான (10%) கழிவும், மேற்படி அட்டவணையின் ஒவ்வொரு காலாண்டுக்கும் எதிரே மூன்றாவது நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள திகதிக்கு முன்னர் குறித்த வீத வரித் தொகை யாழ்ப்பாணம் மாநகர சபையின் நிதியத்திற்குச் செலுத்தப்படுமாயின் குறித்த காலாண்டுக்குரிய தொகையில் ஐந்து சதவீதமான (5%) ஆன கழிவும் யாழ்ப்பாணம் மாநகர சபை யினால் வழங்கப்படும் என்றும் சொல்லப்பட்ட காலங்களில் செலுத்தப்படாதவிடத்து வெற்றுக்காணிகள் மற்றும் வதிவிடங்கள் மீது நூற்றுக்கு பதினைந்து வீதமான (15%) மற்றும் சகல ஏனைய இடங்கள் மீது நூற்றுக்கு இருபது வீதமான (20%) விறாந்துக் கட்டணம் அற விடப்படும் என்றும் தீர்மானிக்கின்றேன்.

**கௌரவ.விஸ்வலிங்கம் மணிவண்ணன்**
**முதல்வர்,**
**மாநகரசபை யாழ்ப்பாணம் .**

| காலாண்டு | மேற்படி அட்டவணை செலுத்த வேண்டிய திகதி | 5% கழிவுக்கு உரித்துப்பெறும் இறுதித் திகதி |
|---|---|---|
| முதலாவது காலாண்டு | 01.01.2022 - 31.03.2022 | 31.01.2022 |
| இரண்டாவது காலாண்டு | 01.04.2022 - 30.06.2022 | 30.04. 2022 |
| மூன்றாவது காலாண்டு | 01.07, 2022 - 30.09, 2022 | 31.07. 2022 |
| நான்காவது காலாண்டு | 01.10, 2022 - 31,12, 2022 | 31.10. 2022 |

**குறிப்பு:-**

2022 ஆம் ஆண்டிற்கான ஆதனவரி அறிவித்தல்கள் தற்போது விநியோகிக்கப்பட்டு வருகின்றன, 31.01.2022 ஆம் திகதிக்குள் செலுத்துவதன் மூலம் 10% கழிவினையும் பெற்றுக் கொள்ள முடியும் என்பதனையும் அறியத்தருகின்றேன்.

(CR 36794) (3 / 6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏன் பதவி நீக்கினர் என்பது இதுவரை எனக்குத் தெரியாது

## விவசாய அமைச்சின் முன்னாள் செயலாளர்

கொழும்பு, டிசெ. 25

விவசாய அமைச்சின் செயலாளர் பதவியில் இருந்து ஏன் நீக்கப்பட்டேன் என்பது தெரியவில்லை. நாட்டில் எந்த நேரமும் உணவுப் பஞ்சம் ஏற்படலாம் என்ற எனது கருத்தில் இப்போதும் உறுதியாக இருக்கின்றேன் இவ்வாறு பேராசிரியர் ஜயசிங்க தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது: எனது பதவிக் காலத்தில் மோசடி மற்றும் ஊழலில் ஈடுபட்டேன் என்ற எந்தக் குற்றச்சாட்டும் என் மீது சுமத்தப்பட வில்லை. என்னைத் திடீரென பதவியில் இருந்து நீக்கியமைக்கான காரணம் எனக்குத் தெரியாது. அது தொடர்பாக முற்கூட்டிய தகவல்கள் எவையும் எனக்குக் கிடைக்கவில்லை. பதவி நீக்குவது தொடர்பில் எழுத்துமூல அறிவிப்பும் வழங்கப்படவில்லை.

ஜனாதிபதி செயலகத்தில் இருந்து எனக்கு வந்த அழைப்பில், நான் பதவியில் இருந்து நீக்கப்பட்டேன் என்று கூறினார்கள். புதிய செயலாளர் நியமனக் கடிதம் ஜனாதிபதி செயலாளரின் வட்ஸ்அப் மூலம் எனக்குக் கிடைத்தது. உணவுத் தட்டுப்பாடு தொடர்பான எனது கருத்தில் எந்தச் சர்ச்சையும் இல்லை. விவசாயத்துறை தொடர்பாக எந்த அறிவும் இல்லாதவர்களுக்கு அது சர்ச்சைக்குரிய விடயமாகவே இருக்கும். தற்போதைய சூழலில் உணவுப் பற்றாக்குறை ஏற்படுவதற்கான சாத்தியக்கூறுகள் உள்ளன. விஞ்ஞான ரீதியான ஆதாரங்களுடனே நான் எனது கருத்தை முன்வைக்கின்றேன். உணவுப் பற்றாக்குறை ஏற்படுவதைத் தவிர்ப்பதற்காக, அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பதை ஊக்குவிப்பதற்காகவே நான் அதைக் கூறினேன்- என்றார். (எ-இ)

---


## 31ஆம் நாள் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



தோற்றம் 14.07.1950 | மறைவு 27.11.2021

கடந்த 27.11.2021 சனிக்கிழமை சிவபதமடைந்த எமது பாசமிகு குடும்பத் தலைவர்

### சின்னத்துரை உலகநாதன்

(ஓய்வுபெற்ற அதிபர், வவுனியா, தமிழ் மத்திய மகா வித்தியாலயம்)

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (25.12.2021) சனிக்கிழமை வில்லூன்றி புண்ணியத் தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிரியைகள் நாளை மறுதினம் (27.12.2021) திங்கட்கிழமை அன்னாரின் யாழ். வேலணை இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் இடம்பெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அருள்நிலை,
8ஆம் வட்டாரம், வேலணை மேற்கு,
வேலணை, யாழ்ப்பாணம். (CR 36737) (3/6)

குடும்பத்தினர்
077 774 5764



## மரண அறிவித்தல்

பிறப்பு 04 . 11 . 1945 | இறப்பு 24 . 12 . 2021



### நாகநாதி மகாலிங்கம்

(ஓய்வு நிலை இ.போ.ச. நடத்துநர்)

அன்னார் காலஞ்சென்ற கமலாதேவியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற தெய்வானைப்பிள்ளை, சின்னப்பிள்ளை விஸ்வலிங்கம், கனகலிங்கம், காலஞ்சென்ற அமுதலிங்கம் அவர்களின் பாசமிகு சகோதரனும், காலஞ்சென்ற ராசையா, கிருஸ்ணசாமி, திலகவதி மற்றும் கண்ணகி ஆகியோரின் மைத்துனரும், சரஸ்வதி, கமலாம்பிகை, நடராசபிள்ளை, துரைசிங்கம், மங்களேஸ்வரி, வடிவாம்பாள், ராஜாம்பாள், கமலேஸ்வரி, நளாயினி, மாலினி, நந்தினி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (24.12.2021) பிற்பகல் 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வேம்பிராய் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது என்பதை அறியத்தருகின்றோம்.

மீசாலை கிழக்கு,
மீசாலை.

(cr 36789) (2.6)

தகவல்:
குடும்பத்தினர்



## 2ம் ஆண்டு நினைவு...

மலர்வு 16 07 1937 | உதிர்வு 17 12 2019



அமரர்

### வன்னியசிங்கம் இரத்தினசிங்கம்

25.12.2021 சனிக்கிழமை

அமைதியின் உருவமாகவும், அடக்கத்தின் இருப்பிடமாகவும்
பண்பின் பெருந்தகையாகவும், பாசத்தின் உறைவிடமாகவும்
எம்மத்தியில் அன்பு ஒளியாக, இருந்த உத்தமரே!!
மண்ணோடு உங்கள், பூவுடல் மறைந்து விட்டாலும்
உங்கள் நினைவுகள் எங்கள், இதயங்களில் இருந்து
ஒருபோதும் மறைவதில்லை.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.

கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.



## மரண அறிவித்தல்



### அமரர் வேலுப்பிள்ளை மாசிலாமணி

பிறப்பு 28.08.1933 | இறப்பு 23.12.2021

புத்தூர் மணற்பகுதி பத்மகிரியை வசிப்பிடமாகக் கொண்ட திரு. வேலுப்பிள்ளை மாசிலாமணி அவர்கள் நேற்று முன்தினம் (23.12.2021) வியாழக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை ஆச்சிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் திருமதி பத்மாவதி அவர்களின் அன்புக் கணவரும், திரு. ரவீந்திரமணி (லண்டன்), திரு.ராதாமணி (சுவிஸ்), திரு.ராம்குமார் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், திருமதி நிர்மலாதேவி, திருமதி.சுமதி, திருமதி சுபாசினி ஆகியோரின் பாசமிகு மாமனாரும், திருமதி நிந்துஷா ஜங்கரன், நிலானி, ரகுராம், வினோத், வித்தியா, சேனுயா, சுயன் ஆகியோரின் பாசமிகு பேரனும், திரு.சிவபாதம், காலஞ்சென்றவர்களான அழகம்மா, பரமேஸ்வரி, தேவமலர் ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை ( 26.12.2021) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக புத்தூர் மணற்பகுதி கௌடுதா மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

[illegible]ரி, புத்தூர்.
021 205 8928

(CR 36790) (3/6)

தகவல்
குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*யாழ்...*

யாழ்ப்பாண மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனம் உட்பட பல்வேறு மீனவ அமைப்புகளின் ஏற்பாட்டில் இந்தப் போராட்டம் மேற்கொள்ளப்பட்டது.

யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளன முன்றலிலிருந்து கடற்றொழிலாளர்கள் பேரணியாகப் புறப்பட்டு, யாழ். மாவட்டச் செயலக முன்றலைச் சென்றடைந்து அங்கு போராட்டத்தை ஆரம்பித்தனர்.

"அத்துமீறி மீன்பிடியில் ஈடுபடும் இந்திய மீனவர்களைக் கைதுசெய். அவர்களை நல்லெண்ண அடிப்படையில் விடுதலை செய்யக்கூடாது. கைதுசெய்த படகுகளை விடுவிக்கக்கூடாது. இலங்கை கடற்படையே கைது செய் கைது செய். இழுவை மடிகளை பறிமுதல்செய். அழிக்காதே அழிக்காதே கடல் வளங்களை அழிக்காதே. இந்திய மீனவரை கைது செய். விடுவிக்காதே விடுவிக்காதே அத்துமீறிய மீனவர்களை விடுவிக்காதே. போராடுவோம் போராடுவோம் நீதி கிடைக்கும் வரை போராடுவோம்" என்பன போன்ற பல்வேறு கோஷங்களை எழுப்பியவாறு அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மாவட்டச் செயலகம் முற்றுகையிடப்பட்டதால், மாவட்ட பிரதிச்செயலர் பிரதீபன், போராட்ட இடத்துக்கு வந்து, மீனவர்களைப் பார்த்து, "நீங்கள் மனு எதையாவது கையளிக்கப்போகிறீர்களா? அல்லது மாவட்டச் செயலருடன் வந்து ஐவர் பேசப் போகின்றீர்களா? " என சமரசப் பேச்சுக்கு அழைப்புவிடுத்தார். இருப்பினும், சம்மேளனத்தின் பிரதிநிதிகள் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து மாவட்டச் செயலகத்தின் முன்பாக ஏ- 9 வீதிக்குக் குறுக்காக அமர்ந்து வீதியை வழிமறித்து மணித்தியாலக்கணக்கில் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வீதிப் போக்குவரத்து தடைப்பட்டதால், வாகனங்களை ஆளுநரின் அலுவலகத்துக்கு ஊடாக பாதைமாற்றி பொலிஸார் அனுப்ப முயற்சித்தனர். எனினும், அதனையும் மக்கள் தடுத்துநிறுத்தியதோடு, இரண்டு வரிசைகளாக அமர்ந்து வீதியை மறித்துப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அதன்பின்னர், அந்த இடத்துக்கு வந்த கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, போராட்ட விடயம் தொடர்பில் பிரதமர் மஹிந்த ராஜபக்சவுடன் கதைத்து, சுமுகமான தீர்வு ஒன்றைப் பெற்றுத்தருகின்றேன் என்று கூறினார். அதனையடுத்தே போராட்டம் கைவிடப்பட்டது. இதனிடையே, போராட்டத்தில், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் இணைந்திருந்தார். டக்ளஸ் தேவானந்தா போராட்ட இடத்துக்கு வந்ததும், கஜேந்திரகுமார் அந்த இடத்திலிருந்து விலகிச் சென்றுவிட்டார்.

(த-125,20,26)

*முடங்குகின்றன....*

அதிபர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

ரயில் அதிபர்கள் தற்போதுவரை பொதிகளைச் சேகரித்தல் மற்றும் பயணச் சீட்டு விநியோகம் ஆகிய பணிகளிலிருந்து விலகியுள்ளனர். இந்தநிலையில், வேலைநிறுத்தப் போராட்டத்தை அவர்கள் நேற்று அறிவித்துள்ளனர்.

எமது கோரிக்கைகள் தொடர்பில் நேற்றும் பேச்சு நடத்தப்பட்டது. எனினும், சாதகமான தீர்வு கிடைக்கவில்லை. அதனால் பணிப்பகிஷ்கரிப்புப் போராட்டம் ஆரம்பமாகிறது என்று, சங்கம் குறிப்பிட்டுள்ளது. (த-இ)

*சிறுமி....*

(வயது - 13) கொலைசெய்யப்பட்டமை தொடர்பில் சிறுமியின் தந்தை, தாய் மற்றும் சகோதரி ஆகியோர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கொலை தொடர்பில் முன்னரே கைதுசெய்யப்பட்ட சிறுமியின் மைத்துநர், எதிர்வரும் 4ஆம் திக்திவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

குறித்த சிறுமி, கடந்த 15 ஆம் திகதி காணாமற்போனநிலையில், அவரது வீட்டிலிருந்து சுமார் 400 மீற்றர் தொலைவிலுள்ள பாழடைந்த வளவொன்றிலிருந்து 18 ஆம் திகதி சடலமாக மீட்கப்பட்டிருந்தார்.

கடந்த 15 ஆம் திகதி தனது வீட்டிலிருந்து அருகிலுள்ள அக்காவின் வீட்டில் இரவு ஒளிரவிடப்பட்டிருந்த மின்குமிழ்களை அணைப்பதற்காக அந்த வீட்டுக்கு செல்கின்றேன் என்றுகூறிச் சென்றிருந்த நிதர்சனா, பின்னர் காணாமற்போயுள்ளார் என்று, அவரது தாயாரால் புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டிருந்தது.

ஆனால், குடும்பத்தினரால் கூறப்பட்ட சம்பவங்கள் அனைத்தும் உருவாக்கப்பட்டுள்ளன என்று பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

ஆரம்பத்தில் நிதர்சனா கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தில் அவரது அக்காவின் கணவரை பொலிஸார் கைது செய்து விசாரணையை ஆரம்பித்தனர். பின்னர் இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பில் அவரது குடும்ப உறுப்பினர்களான தாய், தந்தை, அக்கா, உள்ளிட்ட நான்கு பேரை தடுத்துவைத்து பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இவர்களிடம் மேற்கொள்ளப்பட்டுவரும் விசாரணைகளின் பின்னர் சிறுமியின் தந்தை கொலை தொடர்பான பல திடுக்கிடும் உண்மைகளை ஒப்புதல் வாக்குமூலமாக தெரிவித்துள்ளார் என்று பொலிஸார் கூறியுள்ளனர்.

தனது மகள் நிதர்சனா இரண்டு மாத கர்ப்பிணியாக இருந்தார் என்றும், இதனை அறிந்த அவரது தாய் கருவைக் கலைக்கும் முயற்சியில், சிறுமியை மயக்கமடைய செய்யும் நோக்கில், ஒரு மருந்தை வழங்கினார் என்றும் அவரது தந்தையின் வாக்குமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், கருக் கலைக்கும் முயற்சியின்போதே குறித்த சிறுமி உயிரிழந்திருக்கலாம் என்பதும் தற்போதைய விசாரணையில் தெரியவந்துள்ளதாக புதுக்குடியிருப்பு பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தநிலையில், குறித்த சம்பவ இடத்துக்கு தடயவியல் பொலிஸார், முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி ரி.சரவணராஜா, கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபர் எஜ்.சமுத்திரஜீவ மற்றும் புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கேரத், முல்லைத்தீவு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி , முல்லைத்தீவு சட்ட மருத்துவ அதிகாரி, இராணுவத்தினர் போன்ற பலரும் நேரடியாக சென்று சம்பவ இடத்தில் இருந்த பழைய கிணற்றை பார்வையிட்டனர். நீண்டநேரம் நீரில் ஊறிய அடையாளங்கள் நிதர்சனாவின் உடலில் காணப்பட்டமையால், குறித்த கிணற்றின் நீரை இறைத்து பரிசோதனை மேற்கொண்டுள்ளனர்.

அத்துடன், சிறுமியின் வீட்டிலும் மேலதிக விசாரணைகளை மேற்கொண்ட நீதிவான், சிறுமியின் வீட்டில் குருதிக் கறைபடிந்திருந்த மேசையை சான்றுப்பொருளாக மன்றில் சமர்ப்பிக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டிருந்தார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. விசாரணை தொடர்கின்றது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

(த-இ)

*வவுனியாவில்....*

வவுனியா, டிசெ. 25

பெற்றோல் விலை அதிகரிப்பு மற்றும் அத்தியாவசியப் பொருள்களின் விலை ஏற்றத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து வவுனியா இலுப்பையடிப்பகுதியில் நேற்று தீப்பந்தம் ஏந்தி போராட்டம் ஒன்று மேற்கொள்ளப்பட்டது.

ஐக்கிய மக்கள் சக்தியின் ஏற்பாட்டில் குறித்த போராட்டம் மேற்கொள்ளப்பட்டது.

இந்த அரசின் செயற்பாடுகளால் ஒட்டுமொத்த இலங்கை மக்களும் பல்வேறு பாதிப்புக்களைச் சந்தித்து வருகின்றனர். அனைத்து பொருள்களின் விலையும் அதிகரிக்கப்பட்டு, ஒருவேளை உணவுக்கே அல்லல்படும் அவலநிலைக்கு மக்கள் தள்ளப்பட்டுள்ளனர். மக்களை வீதியில் தள்ளிவிட்டு அரசாங்கத் தரப்பினர் வெளிநாடுகளுக்கு சுற்றுலா செல்லும் நிலையே இன்று காணப்படுகின்றது.

எனவே, இந்த அரசை வீட்டுக்கு அனுப்புவதற்கு ஒட்டுமொத்த மக்களும் தமது பங்களிப்பை வழங்கவேண்டும். என்று, போராட்டத்தின்போது தெரிவித்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டவர்கள், "பெற்றோல் விலையை உடனடியாக குறை, ஏழை மக்களை வதைக்காதே, பட்டினிச் சாவை நோக்கிநகரும் நாடு" போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியிருந்தனர். (த-110)

*தவறான...*

நீர்வேலியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

இதே பகுதியைச் சேர்ந்த சுதாகரன் விந்தியா (வயது -16) என்பவரே தவறான முடிவெடுத்தவராவார்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் விசாரணை மேற்கொண்டார். (த-26)

*யாழ்ப்பாணத்தில்....*

காணப்பட்டுள்ளார். ஆனைக்கோட்டை பகுதியைச் சேர்ந்த 20 வயதான இளைஞர் ஒருவரே மலேரியாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளார் என்று, வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

நோய்வாய்ப்பட்டிருந்த அவர், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சைக்காக நேற்றுமுன்தினம் சென்றபோதே மலேரியாத் தொற்று உறுதி செய்யப்பட்டது. இவருக்கு கடந்த 20 ஆம் திகதி காய்ச்சல் ஆரம்பமாகியுள்ளது. மத்திய ஆபிரிக்க நாடொன்றில் கடந்த 07 மாதங்களாக தங்கியிருந்த அவர், கடந்த 08 ஆம் திகதி நாடு திரும்பியுள்ளார் என்றும் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, மலேரியாத் தொற்றுடன், யாழ்ப்பாணம் மல்லாகத்தை சேர்ந்த இளைஞருக்கும் கடந்த வாரம் மலேரியாத் தொற்று உறுதிசெய்யப்பட்டது.

இந்த இளைஞரும் தென்னாபிரிக்காவிலிருந்து நாடு திரும்பியவர் என்பது குறிப்பிடத்தக்கது. (த-இ)

*எரிபொருள்....*

தெரிவிக்கின்றேன் என்று, தொழிற்சங்கங்களின் ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பாளர் ஆனந்த பாலித்த தெரிவித்தார்.

எதிர்வரும் ஜனவரி மாதம் 4ஆம் திகதியாகும்போது மசகு எண்ணெய்க்குத் தட்டுப்பாடு ஏற்படும் என்பதாலும் சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை மூட வேண்டும் என்பதாலும் இவ்வாறு எரிபொருளின் விலை மேலும் அதிகரிக்கப்படலாம் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

உலக சந்தையில் 15 டொலரால் எரிபொருள் விலை வீழ்ச்சியை சந்தித்துள்ள நிலையிலேயே எமது நாட்டில் எரிபொருள் விலை அதிகரித்துள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (த-இ)

*வெளிநாட்டுப்....*

செய்வதாக இருந்தால், தான் வதியும் நாட்டில் எந்தக் குற்றச் சம்பவத்துடனும் தொடர்புடையவர் அல்லர் என்ற அந்தநாட்டுப் பாதுகாப்புப் பிரிவினரின் சான்றிதழைக் கையளிக்க வேண்டும்.

இந்தச் சான்றிதழை பத்திரமுல்லையில் இருக்கும் பதிவாளர் நாயகம் திணைக்களத்தில் சமர்ப்பித்து இலங்கைப் பதிவாளர் நாயகத்தின் அனுமதியைப் பெற்ற பின்னரே திருமணம் செய்துகொள்ள முடியும்.

இதேபோன்று அந்த நபர் சுகாதார நிலை பற்றிய சுய பிரக்ஞையையும் சமர்ப்பிக்க வேண்டும். இந்த ஆவணங்களைச் சமர்ப்பித்தாலும் அவர்கள் சாதாரண விவகாகப் பதிவாளர்கள் (கிராம பதிவாளர்கள்) மூலம் திருமணப் பதிவு செய்ய முடியாது. பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் மேலதிக மாவட்டப் பதிவாளர் மூலமே பதிவுத் திருமணம் செய்ய முடியும். இது எதிர்வரும் முதலாம் திகதி நடைமுறைக்கு வருகின்றது என்றும் அரசாங்கம் குறிப்பிட்டுள்ளது.

அதேநேரம் இரட்டைப் பிரஜா உரிமை கொண்டவர்களுக்கு இந்த விதிமுறைகள் பொருந்தாது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில், சாதாரண விவாகப் பதிவாளர்கள் (கிராம பதிவாளர்கள்) மூலம் திருமணப் பதிவு செய்யமுடியாது என்றும் பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் மேலதிக மாவட்டப் பதிவாளர் மூலமே பதிவுத் திருமணம் செய்ய முடியும் என்றும் கூறப்பட்டுள்ள விடயம் சாத்தியமற்றது. ஒரே நாளில் அதிக திருமணங்கள் நடைபெறும்போது நேரவிரயம் பெரும் சிக்கலாகமாறும். தவிர, குறித்த ஓர் அதிகாரியின் முன்னிலையில் மாத்திரமே பதிவுசெய்யலாம் என்பது சாத்தியப்பாடற்ற விடயம். குறித்த பதவிநிலையிலுள்ள அனைவருமே அதற்குரிய இயலுமையுடன், குணவியல்புகளுடன் இருப்பார்களா என்பது அவர்களது நெருக்கடி நிலையைப் பொறுத்து சாத்தியப்படாது. எனவே, இந்த விடயத்தில் மாற்று நடவடிக்கை தேவை. அதாவது, சாதாரண விவகாகப் பதிவாளர்கள் (கிராம பதிவாளர்கள்) மூலம் திருமணப் பதிவு செய்ய அரசாங்கம் அனுமதிக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கின்றனர். (த)

*ஒரே நாடு.....*

தெரிவிக்கையில்,

அமைச்சர் அலி சப்ரியை பதவிவிலகச் சொல்லும் ஞானசார தேரரை, ஜனாதிபதி செயலணிக்கு, இந்த ஜனாதிபதிதான் நியமித்தார். அமைச்சர் அலி சப்ரியையும், கபினட் அமைச்சராக இதே ஜனாதிபதிதான் நியமித்தார். இந்தநிலையில், ஜனாதிபதியின் ஞானசாரர், ஜனாதிபதியின் அமைச்சரை பதவி விலகச் சொல்கிறார்.

எதிர்க்கட்சி அரசியல்வாதிகள் இப்படி சொன்னால் அதில் ஓர் அரசியல் தர்க்கமாவது இருக்கும். அப்படியும் நான் அதை சொல்ல மாட்டேன். அரசை நாம் கடுமையாக எதிர்ப்பது என்பது வேறு. ஆனால், இந்த அரசுக்குக்கு உள்ளே சிறுபான்மை கபினட் அமைச்சர்கள் இருக்கின்றமை நல்லது.

நாம் விரும்பினாலும், விரும்பாவிட்டாலும் இதுதான் இலங்கை அரசு.

அமைச்சர்கள் அலி சப்ரி, டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் அமைச்சரவையில் உள்ளமையால், தமிழ் பேசும் மக்களின் குறைந்தபட்ச பிரச்சினைகளையாவது அரசாங்கத் தலைமையின் கவனத்துக்கு கொண்டுவர முடிகிறது.

இந்தக் குறைந்தபட்ச அவகாசத்தையும்கூட தட்டிப்பறிக்க இந்தக் காவிப் பயங்கரவாதி ஆள் முயல்கிறார்.

ஒவ்வொருநாளும் ஒவ்வொன்றை தமிழ் பேசும் மக்களுக்கு எதிராக இந்த ஆள் பேசுகிறார். இவர் மீது சட்டம் பாயாது.

ஆனால், முகநூலில் எதையாவது சிறுபிள்ளைத்தனமாக எழுதி விடும் தமிழ்ப் பையன்களை தேடி வீட்டுக்கு பொலிஸ் வருகிறது. இந்த ஆளுக்கு விசேட சட்ட விலக்கு இருக்கிறது.

அதேபோல், வாயில் வருவதை எல்லாம் பேசும் நடத்தையை இவரின் ஆட்சேபித்து, இந்த செயலணியில் இருக்கும் தமிழ், முஸ்லிம்கள் உடன் பதவி விலகவேண்டும். இல்லா விட்டால் இந்தப் பாவம் இவர்களையும் சேரும். - என்று தெரிவித்தார். (த)

*அரச....*

அமைச்சு தெரிவித்துள்ளது.

அரச ஊழியர்களின் நலன் கருதி இந்தக் கொடுப்பனவு வழங்கப்படுவதாக அந்த அமைச்சு தெரிவித்துள்ளது.

(த-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதவி நீக்கத்தால் குற்றங்கள் மறையாது

## எதிரணி விளாசல்

கொழும்பு,டிசெ.25

பதவிநீக்கம் செய்வதன் மூலம், அரச ஊழியர்களின் குற்றங்களை மூடி மறைக்க இயலாது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹினி கவிரத்ன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், விவசாயத்துறை அமைச்சின் செயலாளர்களை, சங்கீதக் கதிரையைப் போல அரசு மாற்றிக் கொண்டே இருக்கின்றது. கடந்த 25 மாதங்களில் நால்வர் மாற்றப்பட்டுள்ளனர். திருட்டை மூடி மறைப்பதற்காகவே இவ்வாறு, செயலாளர்களை அரசு மாற்றிக் கொண்டிருக்கின்றது. பதவி நீக்கப்பட்ட விவசாய அமைச்சின் செயலாளர் ஜயசிங்க, பதவிக் காலத்தில் முன்னெடுத்த தேசிய கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில் முறையான விசாரணைகள் முன்னெடுக்கப்படவேண்டும். அவர் ஒரு நிறுவனத்தின் முகவராகச் செயற்பட்டுள்ளார். இரசாயன உர இறக்குமதி நிறுவனங்களுக்காக செயற்பட்ட பிரதான நபர் இவர்- என்றார்.

(ம-4,இ)


## மணமகள் தேவை

1987 இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த சூரியன் செவ்வாய் 24 கிரக பாவம் சித்திரை நட்சத்திரம் 1ஆம் பாதம் தொழில் வங்கி பிரதி முகாமையாளருக்கு தகுந்த மணமகளை தேடுகின்றோம்.

(CS 41827)(3.6) 077 398 2508

## NIKON கமரா மற்றும் மொபைல் விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள NIKON D 7500. NIKON D 5200, NIKON Z 6 (Body Only) மற்றும் Lens. மொபைல் (Iphone 6 S+, Samsung note 8, Samsung note 10) விற்பனைக்குண்டு.

(cs 1218) (2.6) 076 998 9801

## ஆசிரியை தேவை

தரம் 2 மாணவருக்கு வீட்டில் வந்து கற்பிப்பதற்கு தகுந்த ஆசிரியை தேவை. விபரங்களுக்கு தொடர்பு கொள்ள (CS 41832)(3.6)

077 911 2953, 077 187 5185

## விஸ்டம் தொழில் நுட்பக் கல்லூரி

A/L 2021 தொழினுட்பப் பிரிவு மாணவர்களுக்கான

மாபெரும் விசேட செயலமர்வு

நாளை முதல் ஆரம்பம்

முற்பகல் 8.00 மணிக்கு

**பொறியில் தொழினுட்பவியல்**

- திரு.P.சண்முகதாசன்
- திரு.S.சதீஸ்குமார்
- திரு.K.ரவிக்குமார்
- திரு.P.கணேஸ்
- திரு.R.சிவரூபன்
- திரு.R.நிரூஜன்

**உயிர்முறைமைகள் தொழினுட்பவியல்**

- திரு.P.நிரோஜனன்
- திரு.K.பிரசாத்
- திரு.R.நிரூஜன்
- திரு.R.சிவரூபன்

**தொழினுட்பவியலுக்கான விஞ்ஞானம்**

- திரு.A.அரவிந்தன்
- திரு.R.நிரூஜன்
- திரு.P.விமலநாதன்
- திரு.சுதர்சன்

"தரம், தனித்துவம், உயர்ந்த பெறுபேறு இதுவே எமது இலக்கு"

மேலதிக விபரங்களுக்கும் மற்றும் பதிவுகளுக்கும்:-

077 248 7774 /076 552 9093 / 021 221 7860

## வீட்டுப் பணிப்பெண் தேவை

தங்கி நின்று சமையல் / பராமரிப்பு வேலைகள் செய்யக்கூடிய பெண்கள் தேவை.

தொடர்பு - 077 77 33 368

## கணிதம், வரலாறு (09.- O/L - A/L)

மாணவர்களின் விருப்பத்துக்கேற்ப தனியாகவோ, குழுவாகவோ, வீடுகளுக்கு வந்து அடிப்படையிலிருந்து கற்பிக்கப்படும். தேசிய ரீதியாக சிறந்த பெறுபேறுக்காக வழிகாட்டும் ஆசிரியர் கல்வி நிலையங்களும் தொடர்பு கொள்ளலாம்.

(CS 41822) (3.6) 077 482 5438

## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் நுணாவில் மேற்கு A9 வீதியிலுள்ள பெற்றோல்செற் அருகாமையில் நுணாவில் வாசகசாலை முன்பாக 8 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. (இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்) தரகர் தேவையில்லை.

(A9 வீதியிலிருந்து 75M தூரம்)


தொடர்பு 076 89 09 259
077 01 50 353

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், சுன்னாகம்,
கந்தரோடைப்பகுதியில் கணக்கர் வளவு
4 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
நிலப்பரப்பு 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
14 அடிபாதையுடன் சுன்னாகம் பஸ் நிலையத்தில் இருந்து 800 மீற்றர் தூரம்
பார்வையிடும் நேரம்: காலை 6.00 தொடக்கம் மாலை 6.00 மணிவரை. விலை நேரில் பேசித்தீர்மானிக்கப்படும். (தரகர் தேவையில்லை)

தொடர்பு: 077 814 7389, 077 614 7333


## மரண அறிவித்தல்



பிறப்பு 07.04.1947

இறப்பு 19.12.2021

### திரு.கனகரத்தினம் கேசவன்

(சிரேஷ்ட சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிசும் , சமாதான நீதவானும் உத்தியோபூர்வ மற்ற நீதவானும், அரச சட்டத்தரணியும், யாழ்ப்பாணச் சட்டத்தரணிகள் சங்க முன்னாள் செயலாளரும் உபதலைவரும், யாழ். நீதிமன்ற பதில் நீதவான், யாழ்ப்பாண பல்கலைக்கழக முன்னாள் பேரவை உறுப்பினர்,சங்கிலியன் மன்ற மூத்த உறுப்பினரும் முன்னாள் தலைவரும், யாழ். பரியோவன் கல்லூரி பழைய மாணவர் சங்க முன்னாள் தலைவர் யாழ் றோட்டரிக்கழக முன்னாள் தலைவர், யாழ் திவ்ய ஜீவனசங்க தலைவர் )

யாழ்ப்பாணம். நல்லூர். செல்லர் வீதி. 128ம் இலக்கத்தை வசிப்பிடமாகக் கொண்ட திரு. கனகரத்தினம் கேசவன் அவர்கள் 19-12-2021ந் திகதியன்று சிவபதம் எய்தி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை கனகரட்ணம் JPUM (அரச சட்டத் தரணி - யாழ்ப்பாணம். முன்னாள் தலைவர் வடபிராந்திய போக்குவரத்துச்சபை) சரஸ்வதி தம்பதிகளின் பாசமிகு புதல்வனும். காலஞ்சென்றவர்களான Lion. வல்லிபுரம் பரமசிவம் (ஜே.பி) சரஸ்வதி தம்பதிகளின் பாசமிகு மருமகனும். சிவமலரின் பாசமிகு கணவரும். Dr.மயூரதன் (ஐக்கிய அமெரிக்கா). Dr.சஜீவன் (அவுஸ்திரேலியா). மேனகா (சட்டத்தரணி). துளசிகா (சட்டத்தரணி) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும். Dr.இந்துஷி மயூரதன் (ஐக்கிய அமெரிக்கா). Dr.பிரபாஷினி சஜீவன் (அவுஸ்திரேலியா). சுதந்திரபாலன் ஜீவதர்ஷன் (முகாமையாளர் - VFS Global - யாழ்ப்பாணம்). சரவணன் நீலகண்டன் (சட்டத்தரணி) ஆகியோரின் பாசமிகு மாமனாரும். Dr. கனரத்தினம் ஜெகதீசன் (ஐக்கிய அமெரிக்கா). நிர்மலா சிவபாதசுந்தரம். விமலா விஜேந்திரன். காலஞ்சென்றவரான Dr.கனகரத்தினம் சிவனேசன் ஆகியோரின் பாசமிகு சகோதரனும். Dr. காந்திமதி ஜெகதீசன் (ஐக்கிய அமெரிக்கா). காலஞ்சென்ற கந்தையா சிவபாத சுந்தரம். காலஞ்சென்ற Dr.நடராசா விஜேந்திரன். ஜெயகௌரி சிவனேசன் ஆகியோரின் பாசமிகு மைத்துனரும். Dr. பரமசிவம் சிவகுமார் (லண்டன்). Dr. சாந்தினி சிவகுமார் (லண்டன்). பரமசிவம் சிவயோகன் (லண்டன்). சிவயோகநாயகி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு சகலனும். மீரா ஜெகதீசன் (ஐக்கிய அமெரிக்கா) Dr.மிதிலா ஜெகதீசன் (ஐக்கிய அமெரிக்கா). Prof. மைத்திரி ஜெகதீசன் (ஐக்கிய அமெரிக்கா) ஆகியோரின் பாசமிகு சித்தப்பாவும் காலஞ்சென்ற நகுலன் (கனடா). துஷ்யந்தன் (கனடா). காஜல் (கனடா). Dr.ஜனகன் (மெடிகேயார் வெள்ளவத்தை). சிந்துஜா. ஜயந்தன் (மல்லாகம் மாவட்ட / நீதவான் நீதிமன்றம்) பிரபாஷினி (அபிவிருத்தி உத்தியோகத்தர் பூநகரி - பிரதேச செயலகம்). ஜனனி (2ம் வருட சட்ட மாணவி) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் Dr.சிவனேசன் சிவராம் (குருநாகல்). Dr. கௌசிகா சிவராம் (அம்பாறை) ஆகியோரின் பாசமிகு பெரியப்பாவும். அதித்தி ராகவ். மாணுஷி. பைரவி ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக நாளை (26-12-2021) ந் திகதி ஞாயிற்றுக் கிழமை நண்பகல் 12 மணியளவில் எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

021 222 3856, 077 664 3086

தகவல்: குடும்பத்தினர்



இப்பத்திரிகை. நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 25.12.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org